KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 139 குரோதி வருடம், மார்கழி மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை
(02.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 01, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

## பஸ் கட்டணம் அதிகரிப்பு
### உரிமையாளர்கள் தீர்மானம்



» 02 பக்கம்




## மரக்கறி விலை சடுதியாக உயர்வு

» 02 பக்கம்

# கொலைகாரனாக விரும்பவில்லை!

## அரகலய போராட்டத்தில் ஈடுபட்ட எவரையும் சுட உத்தரவிடாமை குறித்து மனம் திறந்தார் சவேந்திர



போராட்டக் காலப்பகுதியில் ஒரு குடிமகன் மீது கூட துப்பாக்கிச் சூடு நடத்த தான் உத்தரவிடவில்லை என்றும் அதிகாரத்தை பயன்படுத்தி வெறித்தனமான கொலைகாரனாக மாறுவதில் தனக்கு விருப்பமிருக்க வில்லை என்றும் முன்னாள் இராணுவ தளபதியும் முன்னாள் பாதுகாப்பு பிரதானியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தாய்நாட்டின் பாதுகாப்பு மற்றும் தனித்துவத்துக்காக 41 வருடகாலமாக விசேட அர்ப்பணிப்பை செய்த முன்னாள் இராணுவத் தளபதி நேற்று முன்தினம் (31) தனது ஓய்வை அறிவித்திருந்தார்.

அதனை முன்னிட்டு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, தனது பதவிக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நீண்ட தெளிவுபடுத்தலை வழங்கி ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டிருந்தது. முக்கியமாக அதில், 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் போராட்டம் தொடர்பிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## ஆண்டுக்கு 1,000 பேர் ஐ.எஸ். அமைப்பில் இலக்கு நிர்ணயித்த சஹ்ரான் ஹாசிம்

» 12பக்கம்

## மண்ணெண்ணெய் விலை 05 ரூபாவால் குறைப்பு



» 02பக்கம்

## டயர் விலை குறைப்பு



உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேசிய டயர்களில் விலையை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டயர்களின் விலையை எதிர் பார்க்கும்...

» 02 பக்கம்

## பொருளாதார நிகழ்ச்சி நிரல் புத்தாண்டில் நடைமுறைக்கு

### ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு



» 04பக்கம்

## வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பதே சிறப்புபோல் உள்ளது

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்



புு.கஜிந்தன்

"வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பதே சிறப்புபோல் இருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் வெறுமனே கத்திக்கொண்டிருப்பதைப்போல...

» 02 பக்கம்

## உஷ்



ஜனவரி முற்பகுதியில் முக்கியமான பிரமுகர்கள் சிலர் கைது செய்யப்படவுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் கைது பட்டியலில் இருப்பதாக சொல்லப்படுகிறது. முன்னாள் அமைச்சர் ஒருவரும் கைதாகலாம் என்றும் ஒரு தகவல்.

தற்போது விற்பனையில்
ஜூனியர் சிட்டு
பாலர் பாடசாலை சிறார்களுக்காக...



விலை ரூ.100/= மட்டுமே
அரச பாடத்திட்டத்திற்கு அமைவாக தொகுக்கப்பட்டு வெளிவருகிறது
பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308/0741684643

### கமெண்ட் கந்தர்...



அப்போ இறுதிப்போரில வன்னியில சுட்டுத்தள்ளின ஆட்கள் வேறு நாட்டு ஆட்களோ ஷவேந்திர ஐயா?




» 07 பக்கம்



# மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி முன்னுதாரணமான பாராளுமன்றத்துக்கு சகலரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்

## புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் சபாநாயகர் தெரிவிப்பு



மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி மிகவும் முன்னுதாரணமான பாராளுமன்றத்தைக்





கட்டியெழுப்ப அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக நேற்று (01) இடம்பெற்ற புதிய வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

புதிய உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியிருக்கும் பின்புலத்தில் பாராளுமன்ற பணியாட் தொகுதியினரின் பணியைப் பாராட்டிய சபாநாயகர், எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தனித்துவமான அடையாளத்துடன் கூடிய பாராளுமன்றத்தை உருவாக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் பாராளுமன்றத்தின் வகிபாகம் முக்கியமானது. பாராளுமன்றத்தின் நோக்கத்தில் மதிப்பைச் சேர்ப்பதற்கு வெளிப்படைத் தன்மை, வினைத்திறன் போன்ற விசேடமான அம்சங்களை மேம்படுத்தி தமது பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர குறிப்பிடுகையில்,

நாட்டில் பல மாற்றங்கள் ஏற்படும் ஆண்டான 2025ஆம் ஆண்டில் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் பாரிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்றார். பாராளுமன்றத்தின் பணியாட்தொகுதியினர் இதுவரை ஆற்றிவரும் பணிகளுக்கு நன்றி தெரிவித்த அவர், நாட்டின் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தில் பணியாற்றும் அனைவரினதும் பங்கு மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார். புதிய வருடத்தின் தொடக்கத்தில், சிறந்த அணுகுமுறைகளுடன் மிகவும் திறமையான சேவையை வழங்குவதன் மூலம் இலங்கையின் பெயர் உலகளாவிய ரீதியில் பிரகாசிக்க வேண்டும் என அவர் வாழ்த்தினார்.

2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் பின்னர் பத்தாவது பாராளுமன்றத்துக்குப் பெருமைமிக்க ஆரம்பத்தை வழங்கவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பணியாளர்களுக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். புதிய வருடத்துக்கான வாழ்த்தைத் தெரிவித்த செயலாளர் நாயகம், போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று நியமனத்தைப் பெறும் திறமையான பணியாளர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் இருப்பதாகவும் அவர்களின் அர்ப்பணிப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு மேலதிகமாக, தினமும் பாராளுமன்றத்துக்கு வருகை தரும் வெளிநாட்டு தூதுவர்கள், விருந்தினர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கிவரும் பணியாளர்கள், இணைந்த சேவையின் பணியாளர்கள் அனைவருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார். இந்த நடவடிக்கைகளில் முறையான பாதுகாப்பை வழங்குவதன் மூலம் பங்களித்த இலங்கை பொலிஸ் உட்பட அனைத்து பாதுகாப்புப் படையினருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றப் பணியாட் தொகுதியினர் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற "Clean Sri Lanka" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வின் நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்புடன் இணைந்துகொண்டதுடன், "Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சத்தியப்பிரமாணம் மற்றும் உறுதிமொழியையும் எடுத்துக்கொண்டனர்.

பாராளுமன்ற பதவியணித் தலைமை அதிகாரியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன, பாராளுமன்ற திணைக்களங்களின் பிரதிநிதிகள், இணைந்த சேவைகளின் பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## பரீட்சை ஆணையாளரின் விசேட அறிவிப்பு

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டதாக கூறப்படும் மூன்று வினாக்களுக்கு பதிலாக சகல பரீட்சார்த்திகளுக்கும் இலவசப் புள்ளியை பெற்றுக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ.அமித் ஜயசுந்தர நேற்று (01) தெரிவித்தார். கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கான முதலாவது வினாத்தாளிலுள்ள மூன்று வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்து உயர் நீதிமன்றத்தின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட வழக்கு விசாரணைக்கான தீர்ப்பு நேற்றுமுன்தினம் (31) வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய புதிய செயலி

'கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கு இணைவாக ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களத்தினால் e-Traffic தொலைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த செயலி நேற்று பொலிஸ் தலைமையகத்தில் பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவினால் அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டது.

இந்த தொலைபேசி செயலியினூடாக வீதிகளை அண்மித்த பகுதிகளில் இடம்பெறும் போக்குவரத்து குற்றங்கள் மற்றும் வீதி சட்டவிதிமுறை மீறல்கள் தொடர்பில் பொது மக்கள் நேரடி முறைப்பாடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.police.lk என்ற இணைய முகவரியினூடாக E-SERVICE என்ற தெரிவுக்குச் சென்று e-Traffic செயலியை தொலைபேசிகளுக்கு இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ளக் கூடியதாக இருக்குமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனூடாக மக்களின் முறைப்பாடுகளை பொலிஸ் தலைமையகத்துக்கு சமர்ப்பிக்க முடியுமென பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டிலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் 607 பொலிஸ் நிலையங்களில் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் இடம்பெறும் விபத்துகளை குறைத்துக்கொள்வதற்காக பொதுமக்களின் உதவியை பெற்றுக்கொள்ள e-Traffic தொலைபேசி செயலியினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயலியில் இருக்கும் Camera option icon அல்லது Vedio option icon என்பவற்றை பயன்படுத்தி போக்குவரத்து குற்றங்கள் தொடர்பிலும் வீதிகளை அண்மித்த பகுதிகளில் இடம்பெறும் ஏனைய சம்பவங்கள் தொடர்பிலும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் இந்த கணக்கினூடாக பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்க முடியுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் போக்குவரத்து குற்றங்களில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் ஏனைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்து அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் பிரிவுக்கு அனுப்பி வைக்க பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்படல் வேண்டும்

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



''நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அநுர அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது'' என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை (01) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே செல்வம் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள் எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். இதனை ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் 13ஆவது திருத்தச் சட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே இந்த புதிய ஆண்டில் எமது கிராம மக்கள் அனைத்து விதமான வசதிகளும் உள்ளது என்று கூறக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயற்பட வேண்டும். அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சிப்பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். பிரிந்து செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக செயற்படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசியக்கட்சிகள் இல்லாது போகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படும்.

எனவே எதிர்வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாக செயற்படவில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அநுரவின் அலை வடக்கு கிழக்கிலும் ஏற்படும். இதனால் பாதிப்புகள் ஏற்படும் என்பது உண்மை.

மக்களின் எதிர்பார்ப்பு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக செயற்படுங்கள் என்பதே. அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல் போய்விடுவோம்'' என்றார்.

## நாமல் குமார கைது

சமூக செயற்பாட்டாளரான நாமல் குமார நேற்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் நேற்று (01) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வந்திருந்த சந்தர்ப்பத்திலேயே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கர்தினாலின் உருவப்படத்துக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலான குரல் பதிவொன்று தொடர்பில் நாமல் குமார என்பவர் அண்மையில் ஜனாதிபதி செயலக அலுவலகம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதியை நிலைநாட்டுமாறு கத்தோலிக்கச் சபை பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தது.

## மரக்கறி விலை...

சந்தைகளில் போஞ்சி, கெரட், கோவா, தக்காளி, கத்தரிக்காய் மற்றும் பச்சை மிளகாய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை அதிகரித்து காணப்பட்டது. மத்திய வங்கியின் நாளாந்த விலைப்பட்டியலின் பிரகாரம், ஒரு கிலோ போஞ்சி 250 ரூபா முதல் 600 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கெரட் 175 ரூபா முதல் 480 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் ஒருகிலோ கோவா 360 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ தக்காளி 200 ரூபா முதல் 400 ரூபா வரையிலும் ஒரு கிலோ கத்தரிக்காய் 275 ரூபா முதல் 600 ரூபா வரையிலும் ஒருகிலா பச்சை மிளகாய் 680 ரூபா முதல் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் நேற்றைய தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## மண்ணெண்ணெய்...

மண்ணெண்ணெய் விலை நேற்றுமுன்தினம் (31) நள்ளிரவு முதல் 05 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 183 ரூபாவாகும். இதனிடையே, ஏனைய எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் இல்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## வடக்கு மாகாண சபை...

மாகாண சபை இருந்தாலும் அங்கும் கத்திக் கொண்டுதான் இருப்பார்கள். இப்போது அதிகாரிகளால் மாகாண சபை சிறப்பாக நடத்தப்படுகின்றது'' என யாழ்ப்பாணப் பல்கலைக்க ழகத்தின் துணை வேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று பல்கலைக் கழக மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபையால் நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகை யிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் 1984ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தில் படித்தவர். அவர் படித்த காலம் மிக நெருக்கடியானது. அதைப்போலத்தான் அவர் பணிக்குச் சேர்ந்த 1991ஆம் ஆண்டு காலமும் நெருக்கடியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்துதான் பணியாற்றினார்கள்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரிகள் கடமையுணர்வுமிக்கவர்கள். வடக்கு மாகாணத்தின் பலமே அவர்கள்தான். இப்போதுதான் வடக்கின் ஆளுநரைக்கூட யாழ்ப்பாணத்திலிருந்து கண்டு பிடித்திருக்கின்றார்கள். அரசியல்வாதிகளையும் கொழும்பிலிருந்து கொண்டுவரும் ஒரு காலம் இருந்தது. எங்களால் செய்ய முடியாது என்ற எண்ணம் இனியாவது மாற்றப்படவேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநராக வேதநாயகனை இந்த அரசாங்கம் தெரிவுசெய்ததன் ஊடாக வடக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு ஒரு படி மேலேகூடி விட்டது. வடக்கு ஆளுநரும் அவரது அணியும் இந்த மாகாணத்தில் சிறப்பாக வேலை செய்கின் றார்கள். அவர்களை அப்படியே சேவை செய்யவிட்டால் போதும் என நினைக்கின்றேன். மாகாண சபை இல்லாமல் இருப்பது நல்லம்தான். இல்லாவிடின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப்போல அங்கும் சத்தம்தான் போட்டுக்கொண்டிருப்பார்கள்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மாஸ்ரர் பிளான் இருக்கா என்று கேட்பார்கள். ஆனால் இந்த அதிகாரிகள்தான் இங்கிருந்து எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கின்றார்கள்'' என்றார்.

## டயர் விலை...

மட்டத்தில் குறைப்பதற்கு தேசிய டயர் உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தேசிய டயர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் நுகர்வோருக்கு நிவாரண விலையில் தேவைக்கு ஏற்ப தேசிய டயர்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் நேற்று முன்தினம் தேசிய டயர் உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின்போதே டயர் உற்பத்தியாளர்கள் சங்கம் இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் டயர் நாட்டுக்குள் இருப்பில் இருக்கும்போது நாட்டில் இருப்பிலுள்ள பில்லியன் கணக்கான டொலர்களை செலவு செய்து டயர்களை இறக்குமதி செய்வதனூடாக நாட்டில் இருப்பில் இருக்கும் டொலருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு டயர்கள் இறக்குமதி செய்யப்படுவதால் தேவைக்கும் அதிகமான டயர்கள் நாட்டில் இருப்பில் இருப்பதாக அமைச்சர் வசந்த சமரசிங்க அறிவித்திருக்கிறார்.

அதன் காரணமாக எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் டயர்களுக்கு வரையறை விதிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய டயர் உற்பத்தியாளர்கள் சங்கம் வசந்த சமரசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதுடன், எதிர்காலத்தில் தேசிய டயர்களின் விலையை எதிர்பார்க்கும் மட்டத்தில் குறைப்பதற்கும் இந்த பேச்சுவார்த்தையின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## கொலைகாரனாக

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

''எனது இராணுவ வரலாற்றில் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மக்கள் போராட்டம் என்பது உண்மையான நண்பர்கள் மற்றும் உண்மையான எதிரிகள் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்ட சிக்கலான காலப்பகுதியாகும். இராணுவம் என்பது உள்ளக அல்லது வெளியிலிருந்து அரசுக்கு ஏற்படும் ஆபத்துகளிலிருந்து பொது மக்களின் பாதுகாப்புக்காக முன்னிலையாகும் உத்தியோகபூர்வ ஆயுதப்படையாகும்.

2022 போராட்டம் என்பது உள்நாட்டு மக்களிடையே ஏற்பட்ட அமைதியின்மையாகும். அதன்போது அந்தப் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு குறைந்தபட்ச அதிகாரத்தை மாத்திரம் பயன்படுத்துவதற்கு இராணுவத்துக்கு நான் கட்டளை பிறப்பித்திருந்தேன்.

அப்பாவி குடிமகன் ஒருவன் இராணுவ துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பதை நான் விரும்பவில்லை.

நிராயுதபாணியான மக்களுக்கு எதிராக உத்தியோகபூர்வ அதிகாரத்தை பயன்படுத்தி வெறித்தனமான கொலைகாரனாக மாறுவதில் எனக்கு விருப்பமில்லை. அதன் பிரதிபலன் நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக் கூடாது. அதற்கு சிறந்த உதாரணம், எமது நாட்டுக்கு அண்மையிலுள்ள அரசுகளின் தற்போது உருவாகியுள்ள மக்கள் போராட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினரின் செயற்பாட்டால் ஏற்பட்டுள்ள தீமைகளை அடையாளப்படுத்த முடியும்.

அதிகார வெறிக்கொண்ட ஆட்சியாளர்கள் கூறுவதுபோன்று அரசை காட்டிக்கொடுக்கும் வகையில் அநாகரீகமாக தாக்குதல் நடத்தும் நோக்கம் இருக்கவில்லை. வெளிநாடொன்றின் கூலிப்படையாகவோ அல்லது வெளிநாட்டு தூதரகமொன்றின் செல்லப்பிராணியாக இருக்கவோ எனக்கு கீழ்த்தனமான நோக்கம் இல்லை.

அவ்வாறெனில், எதற்காக நான் அப்போது அதிகாரத்திலிருந்த ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கடமையாற்றிய அப்போதைய பிரதமருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்த சந்தர்ப்பத்தில், போராட்டக்காரர்களை சிறைப்பிடித்து விமான படையினூடாக பிரதமரின் உயிரை பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்?

அரசியல்வாதிகளின் வீடுகளை தீக்கிரையாக்க வந்த போராட்டக்காரர்களில் அநேகமானவர்களை விரட்டி அவர்களின் வீடுகளை பாதுகாத்தது ஏன்? இருந்தபோதும் போராட்டக் காலத்தில் முன்னெடுத்த தந்திரோபாயங்கள் தொடர்பில் ஆட்சியாளர்களின் புரிதல் எனக்கு பாதகத்தையே ஏற்படுத்தும்.

இராணுவ வரலாற்றில், நான்கு நட்சத்திரங்களை கொண்டு ஜெனரல் ஒருவர் இராணுவத் தளபதியாக இருந்த பட்டியலில், இரண்டாவது இராணுவ தளபதி நானாவேன். 2022 மே மாதம் 31 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஏழு மாதங்கள் மீதமிருந்தபோதும் இராணுவ தளபதி பதவியிலிருந்து பாதுகாப்பு பிரதானி பதவிக்கு உத்தியோகபூர்வமாக இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆயினும் நான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீங்கி பாதுகாப்பு பிரதானியாக கடமையாற்றிக்கொண்டிருந்தபோது அரச அனுமதியுடன் வெளிநாடொன்றில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்ற சென்றிருந்தபோதே அதனை அண்மித்த காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசிலிருந்து தப்பித்துச் செல்ல நேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

## பஸ் கட்டணம் அதிகரிப்பு

எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எதனையும் எடுக்காமையின் காரணமாக, ஜூலை மாதம் இடம்பெறவுள்ள கட்டண திருத்தத்தின் போது பஸ் கட்டணம் மேலும் அதிகரிக்கப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

வாகன உதிரிப்பாகங்களுக்கான விலை அதிகரித்துள்ளமையின் காரணமாக, தாம் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜூலை மாதமாகும்போது நிச்சயமாக பஸ் கட்டணத்தில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். அதனை என்னால் உறுதியாக கூற முடியும். எரிபொருள் விலை குறைந்தால் அதற்கான நிவாரணத்தை வழங்க முடியும்.

ஆனால், எரிபொருள் விலை குறைப்பு இடம் பெறவில்லை. எரிபொருள் மாத்திரமல்லாமல் ஏனைய செலவுகளையும் குறைக்க வேண்டியது அவசியமாகும். ஏனைய செலவுகளினால் பாரதூரமாக சிக்கல்களை சந்தித்துள்ளோம். வாகன உதிரிப்பாகங்களுக்கான விலையும் குறைக்கப்படவில்லை. பெரும் நெருக்கடியிலேயே இருக்கிறோம்.

ஜூலை மாதமாகும்போது பஸ் கட்டணம் வரையறையின்றி அதிகரிக்கப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். பஸ் ஒன்றின் விலை ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. அதற்கு ஏற்ப ஏனைய சகல செலவுகளும் அதிகரித்துள்ளன. எனவே, ஜூலை மாதம் இடம்பெறவுள்ள பஸ் கட்டண திருத்தத்தின் போது இந்த செலவுகள் குறித்து கவனம் செலுத்த நேரிடும். நிச்சயமாக ஜூலை மாதத்தில் பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள நேரிடும்.

எரிபொருள் விலையை குறைப்பார்கள் என்றே எதிர்பார்த்தோம். பஸ் கட்டணத்தை குறைக்க வேண்டுமெனில் எரிபொருளுக்கான விலை 30 ரூபாவால் குறைக்க வேண்டும். 3 ரூபா நட்டத்திலேயே நாங்கள் போக்குவரத்து சேவையை வழங்கி வருகிறோம். எனவே எரிபொருள் விலை 4 சதவீதத்தால் குறைக்கப்பட்டால் பஸ் கட்டணத்தை குறைப்பதற்கு நாங்கள் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம் என்றும் சுட்டிக்காட்டினார்.




# மாகாணசபைத் தேர்தல் - 2025

## வேட்பாளராவதற்கு உங்களுக்கும் ஓர் வாய்ப்பு

2025 மாகாணசபைத் தேர்தலுக்கான சர்வஜன அதிகாரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அத் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையோரைத் தெரிவுசெய்ய, இலங்கையின் சகல மாவட்டங்களிலிருந்தும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!

நீங்கள் ஏற்கனவே வாக்காளராக பதிவுசெய்யப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலுக்கான மாவட்டத்தின் நிரந்தரப் பதிவாளர் எனின், கீழ்காணும் தகவல்கள் உட்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் விண்ணப்பத்தை நிரப்பி, எமக்கு அனுப்பி வைக்கவும்.

01. முழுப்பெயர்
02. நிரந்தர முகவரி
03. பிறந்த திகதி
04. தொலைபேசி இலக்கம் (நிரந்தர/கையடக்க)
05. மாவட்டம்
06. உங்களுக்குரித்தான மாகாண சபை
07. தேர்தல் தொகுதி (ஆசனம்)
08. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்
09. அரசியல் செயற்பாடுகள் மற்றும் சமூகநல சேவைகள் பற்றிய விபரங்கள்

**மேற்கண்ட விபரங்கள் அடங்கிய உங்களது விண்ணப்பங்களை, 2025 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்**

**+94 770 139 139** WhatsApp செய்யுங்கள். அல்லது,

**பொதுச் செயலாளர், சர்வஜன அதிகாரம், இல.11, பார்க் அவென்யூ, கொழும்பு 08**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **connect@sarvajanabalaya.com**

எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

sarvajanabalaya.com

**தொழில்முனைவான அரசாங்கம் - மகிழ்ச்சிமிகுந்த தேசம்**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 02 ஆம் திகதி, வியாழக்கிழமை

# தரம் 5 பரீட்சை வினாத்தாள் விடயத்தில் நீதிமன்றம் கவனம்

“2024ஆம் ஆண்டுக்கான தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான முதல் மூன்று வினாக்களுக்கும் இலவசப் புள்ளிகளை வழங்குவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்’’- என உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் (31) தீர்ப்பளித்துள்ளது.

இதனடிப்படையில் முன்கூட்டியே வெளியான முதல் மூன்று வினாக்களுக்கும் இலவசப் புள்ளிகளை வழங்குவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் எடுத்த முடிவும் கடந்த நவம்பர் மாதம் 25ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின்படி எடுக்கப்பட்ட முடிவும் செல்லுபடியற்றதாகிறதெனவும் நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பரீட்சைக்கு முன்னதாகவே வெளியான மூன்று வினாக்களுக்காக இலவசப் புள்ளிகளை வழங்குதல், அம்மூன்று வினாக்களையும் நீக்குதல் மற்றும் முன்னரே கசிந்த முதலாவது வினாத்தாளை நீக்கி புதிதாகப் பரீட்சை நடத்துதல் உள்ளிட்ட மூன்று பரிந்துரைகளை புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நிபுணர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட மூன்று பரிந்துரைகளில் பொருத்தமான பரிந்துரையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் மூன்று வினாக்கள் முன்கூட்டியே வெளியானதன் காரணமாக அப்பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச மதிப்பெண்கள் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது.

பரீட்சை வினாத்தாளின் முதல் மூன்று வினாக்களுக்கு இலவசப் புள்ளிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் எனத் தீர்ப்பளிக்குமாறு கூறி மனுதாரர்கள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் (31) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ‘‘அண்மையில் நிறைவடைந்த தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்குவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்’’- எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வல்லுநர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில் பொருத்தமான பரிந்துரையைத் தெரிவுசெய்து, உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதியரசர் குழாம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வினாத்தாள் வெளியானதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களான, ஐ.ஜி.எஸ். பிரேமதிலக்க மூன்று மில்லியன் ரூபாவையும் பாடசாலை ஆசிரியரான சமிந்தகுமார இலங்கசிங்க இரண்டு மில்லியன் ரூபாவையும் அரசாங்கத்துக்கு அபராதத் தொகையாகச் செலுத்தவேண்டுமெனவும் உத்தரவிட்ட மூவரடங்கிய நீதியரசர் குழாம், அபராதத் தொகையை நேற்றுமுன்தினம் (31) முதல் நான்கு வாரத்துக்குள் செலுத்தி முடிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டவர்களால் இலஞ்சம் பெறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதியரசர் குழாமினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் பொதுப் பரீட்சைகளின்போது அதன் நம்பகத் தன்மையைப் பாதுகாப்பதில் கவனஞ்செலுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு மற்றுமொரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு மிகவும் முக்கியமானது மட்டுமல்லாமல், வரவேற்கப்படக்கூடியதுமான ஒன்றாகும் . சிறுவயது மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய ஒரு விடயத்தை அரச நிர்வாக அதிகாரிகள் கண்மூடித்தனமாகக் கையாளும்போது அதற்கு சரியான நேரத்தில் குட்டுவைத்திருக்கிறது உயர் நீதிமன்றம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசிந்த போது அதை அதிகாரிகள் கையாண்ட விதம் திருப்தியானதாக இல்லை. இந்த விடயத்தில் பல சிக்கல்கள் மறைமுகமாக உள்ளன. இந்த விடயத்துக்கு தீர்வொன்றைக்காண இவ்வளவு கால நேரம் எடுத்துக்கொண்டதே தவறானது. அதிலும் கேள்விகளுக்கான விடை பென்சிலால் எழுதப்பட்டது என்பதால் அந்த எழுத்துகள் அழிந்துவிடும் அபாயம் ஒரு பக்கம் இருக்கிறது. மறுபக்கம், இந்தப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதே வேறொரு சிறந்த பாடசாலைக்கு செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் தான்.புதிய வருடத்தின் ஜனவரி மாதமும் தொடங்கியுள்ளதால் மேற்படி பெறுபேறுகளின் தாமதமான வெளியீடும் அதில் தாக்கத்தைச் செலுத்தப்போகிறது.

உயர் நீதிமன்றம் கூறியதுபோல இது அடிப்படை மனித உரிமை மீறல் தான். பிரச்சினையை தீர்க்கிறோம் என்பதற்காக பரீட்சையை நன்றாகச் செய்த, செய்யாத எல்லோருக்கும் ஒரே அளவிலான புள்ளிகளை வழங்குவதென்பது சிறந்த முடிவல்ல. அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலால் மாணவர்கள் உளவியல் ரீதியாகப பாதிக்கப்பட்டனரே தவிர வேறெதுவும் நடக்கவில்லை.

இப்போது உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பின்படி ஒழுகி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கிரமமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். அதுவும் விரைவில் எடுக்காத பட்சத்தில் நீதிமன்றப் பணிப்பை புறக்கணித்ததாக அமைந்துவிடும் என்பதற்கப்பால் மாணவர்களின் உளவியலையும் அது பாதிக்கலாம்.

# நாட்டுக்கும் எமது பிரஜைகளுக்கும் புதிய விழுமியக் கட்டமைப்பு தேவை

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க**

‘‘பொது மக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் மாத்திரமே ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்’’ என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (01) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

‘‘2025க்குள் காலடி எடுத்து வைக்கும் இந்த சந்தர்ப்பம் புதிய வருடமொன்றின் ஆரம்பம். புதிய வருடத்தின் உதயம் என்று கூறலாம். எனவே பல தசாப்தங்களாக, எமது நாட்டில் இவ்வாறான பல வருடங்கள் கடந்து சென்றுள்ளன. நாம் நல்ல விடயங்களுக்குள் காலடி வைத்தோமா என்ற கேள்விக்குறி எமக்குள் இருக்கிறது. கடந்த ஒவ்வொரு வருடங்களும் சிறந்த விடயங்களுக்காக புதுப்பித்துக் கொண்டு முன்னோக்கிச் சென்றோமா இன்றேல் மோசமான விடயங்களை புதுப்பித்து கடந்த காலத்துக்குச் சென்றோமா? என்ற பிரச்சினை எம்முன் உள்ளது. அதனால் இந்த புத்தாண்டுடன் எமது நாட்டை புதிய மாற்றத்துக்குட்படுத்தும் நிரந்தரமான நோக்கம் எமக்கு உள்ளது. அதற்கான கடமையும் பொறுப்பும் எம்மை சார்ந்திருக்கிறது. நானும் எனது அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அனைத்து அரசியல் தரப்புகளும் இதற்கான அர்ப்பணிப்பை செய்வோம்.



எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் அரசியலமைப்பை மீறியிருப்பதாக பல சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் முதல் பிரஜை சட்டத்தின் ஆதிக்கத்தை சிதைக்கும் நாட்டில், சட்ட ஒழுங்கு பற்றி என்ன பேசுவதோ என்பதை கேட்கிறேன். எனவே நாம் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த பாரிய முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதேபோல் எமது நாட்டின் அரச கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு மற்றும் முழு சமூகத்துக்குள்ளும் ஊழல் மோசடி, வீண் விரயம் என்பன எமது முழு நாட்டுக்குள்ளும் புற்றுநோயைப்போல பரவியுள்ளன.

ஊழல் மோசடியை நிறுத்த நாம் பாரிய முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. அதற்குள் எமது நாட்டின் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு பெரும் பணி உள்ளது. அதற்கான பணியை ஆற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்பை சட்ட மா அதிபர் திணைக்களம் வழங்குமென நம்புகிறேன்.

எனவே, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை எமது நாட்டில் வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட திசையை நோக்கி நகர்த்தும் ஒரு பொருளாதார வேலைத்திட்டத்தின் ஆரம்பமாக்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். எமது இரண்டாவது இலக்கு, இந்த நாட்டை டிஜிட்டல் மயமாக்குவதாகும். செயற்றிறனற்ற வீண் விரயத்தை குறைத்தல் மற்றும் ஊழல், மோசடியை மட்டுப்படுத்தவும் பிரஜைகளுக்கு மிக இலகுவாக அரசாங்கத்துடன் இருக்கின்ற தொடர்பை தொடர்ச்சியாக பேணிக்கொள்ளவும் தேவையான அடித்தளத்தை டிஜிட்டல் மயமாக்கல் உருவாக்கும்.

எமது அடுத்த முக்கிய திட்டம் Clean Sri Lanka. இது சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவது தொடர்பானது மட்டுமல்ல. இது முழுமையாக சிதைந்து போயுள்ள சமூகக் கட்டமைப்பினால் அநாதரவான நிலையிலிருக்கும் எமது தாய்நாட்டை மீளமைப்பதற்காக அனைத்துத் துறைகளிலும் செய்யப்படும் தூய்மையாக்கலை காண்பதே எமது நோக்கமாகும். இலங்கையில் இன்று என்ன நடந்துள்ளது? சிறந்ததொரு சுற்றுச்சூழல் கட்டமைப்பு உள்ள நாட்டில் 2023ஆம் ஆண்டு யானை - மனித மோதலால் 182 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 2023ஆம் ஆண்டில் 484 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டுள்ளன. சிறந்த அழகியலுடன் கூடிய சுற்றுச்சூழல் கட்டமைப்பு இருந்தாலும் வருடத்துக்கு 484 யானைகள் இறக்கும் நாடாக இருக்கிறோம்.

அதேபோல், வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பெருமளவானோர் இடம்பெயர்கின்றனர். உயிரிழப்பு, பெரும் பொருளாதார இழப்புகள் ஏற்படுத்துகின்றன. எனவே, சுற்றுச்சூழல் கட்டமைப்பை மீளமைப்பதை Clean Sri Lanka வேலைத்திட்டத்தின் மிக முக்கியமான அங்கமாக கருத வேண்டும்.

எமது நாட்டுக்கும் நாட்டின் பிரஜைகளுக்கும் புதிய மதிப்புகள் மற்றும் புதிய நெறிமுறைகள் அவசியப் படுகின்றன. மிகத் தவறான விடயங்களை நாம் மதிப்பாக புரிந்து கொண்டுள்ளோம். இன்று இந்த சமுதாயத்துக்குள் ஒரு புதிய மதிப்பு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். இதனை எங்கிருந்து ஆரம்பிப்பது?

முதலில், தமது வாழ்க்கை பற்றிய மதிப்பு அவசியமாகிறது. நான் நினைக்கும் வகையில் எமது நாட்டில் பெரும்பாலான பிரஜைகளுக்கு தமது வாழ்க்கை தொடர்பில் மதிப்பு கிடையாது. ஏன் அவ்வாறு சொல்கிறேன், கடந்த வருடத்தில் 595பேர் கடலில் அல்லது நீர்த்தேக்கங்களில் அல்லது கிணற்றில் அல்லது குளத்தில் விழுந்து இறந்துள்ளனர். நீரில் மூழ்கி 595 பேர் இறந்துள்ளனர் என்பதிலிருந்து என்ன தெரிகிறது? 2,321 பேர் விபத்துகளினால் இறந்துள்ளனர். நாளொன்றுக்கு 07 பேர் வாகன விபத்துகளால் இறக்கும் நாடு உருவாகியுள்ளது. அதனால் வாழ்வின் மதிப்புகளை பற்றி அறியாத சமுதாயம், பிறர் வாழ்வு குறித்து அக்கறை இல்லாத சமூகம் உருவாகியிருக்கிறது.

பொறுப்பை நிறைவேற்றுவதும் இந்த Clean Sri Lanka வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு சமூகத்தினால் தமது பிரஜைகள், அங்கவீனமுற்ற சமூகங்கள் என்பவற்றை பராமரிக்க வேண்டும். இது சமூக நீதி தொடர்பான பிரச்சினையாகும். வயது முதிர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்க முடியுமா? அவர்கள் அங்கவீனமடைந்துள்ளதால் சமூகத்துக்கு பங்களிப்பவராக இல்லாமல் இருப்பதால் அவர்களை ஒதுக்கிவைக்க முடியுமா? அப்படிப்பட்ட சமுதாயம் ஒருபோதும் நல்ல சமுதாயமாக மாறாது. தங்களுக்கு அருகிலுள்ள மாற்றுத்திறனாளி சமூகம், தங்கள் அருகில் உள்ள முதியவர்கள், தங்கள் அருகில் இருக்கும் பெண்கள், இளைஞர்கள் மீது இந்த சமூகத்துக்கு கருணை இல்லையென்றால் அந்த சமூகம் குறித்து அன்போ அக்கறையோ பராமரிப்போ இல்லாவிட்டால் அந்த சமுதாயம் நல்ல சமுதாயமாக மாறாது. அந்தச் சமூகம் பிறரைப் பற்றி குறிப்பிடத்தக்க அளவில் சிந்திக்காத குரூரமான மனப்பான்மையுள்ள சமூகம். எனவே, அந்த சமூகத்தில் புதிய மனப்பாங்கை உருவாக்க வேண்டும்.

இன்று, இலங்கையில் பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு விடயத்திலும் மிக முக்கியமான பல துறைகளை நிர்வகிக்கும் நிறுவனங்களை எமது அரசாங்கம் கொண்டுள்ளது. அந்த நிறுவனங்களில் பெருமளவான நிறுவனங்களின் தலைவர்கள் தாமாக முன்வந்து தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகின்றனர். எயார் லங்காவின் தலைவரைப் போன்றே டெலிகொம் நிறுவனத்தின் தலைவர், போர்ட் சிட்டி நிறுவனத்தின் தலைவர், முதலீட்டுச் சபையின் தலைவர், எரிவாயு நிறுவனத்தின் தலைவர் போன்ற பல திறமையானவர்கள் மிகவும் தொழில்முறை திறன்களைக் கொண்டுள்ளவர்கள் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகின்றனர்.

அதேபோன்று தனிப்பட்ட ரீதியில் நோக்கினால் எனது ஆலோசகர்கள் மூவரும் அரசிடம் இருந்து ஒரு ரூபா கூட சம்பளம் பெறாமல் பணிபுரிகின்றனர். டிஜிட்டல் மயமாக்கலில் அனுபவம் உள்ள இலங்கையில் பிறந்த மிக சிரேஷ்ட நிபுணரான அவர், தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகிறார். அறிவியல் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த அவர், அத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அவர் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகிறார். பொருளாதாரம் தொடர்பில் நிறைய நடைமுறை அனுபவங்களைக் கொண்டிருக்கும் அவர் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகிறார்.

இவ்வாறான அரசியல் தான் நம் நாட்டுக்கு தேவை. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப, இதுபோன்ற புதிய அனுபவங்களைக் கொண்ட மாற்றம் வேண்டும். சம்பளம் பெறாமல் ஒரு மணி நேரம் யாரும் வேலை செய்யமாட்டார்கள் என்ற நிலையில் இந்த புதிய அனுபவம் காணப்படுகிறது.

ஆனால், அவர்கள் தங்கள் அறிவையும் நேரத்தையும் உழைப்பையும் உயர்ந்த தொழில்களையும் விட்டுவிட்டு தொண்டர் அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியுள்ளனர். ஒரு சிறந்த முன்மாதிரி நம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நாம் எழுச்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை உங்களுக்கு சொல்கிறேன். இதனை கடைசிச் சந்தர்ப்பம் என்று நான் ஒருபோதும் கூறமாட்டேன். மக்களுக்கு கடைசி சந்தர்ப்பம் என்று சந்தர்ப்பம் கிடையாது. வாய்ப்புகள் உள்ளன. ஒரு தேசமாக ஒரு நாடாக எழுந்து நிற்பதற்கு வாய்ப்பு இன்று கிடைத்துள்ளதாக நாம் நினைக்கிறோம். எமது நாட்டின் பிரஜைகளிடம் நான் கேட்பது என்னவென்றால், இந்த வாய்ப்பை தவறவிடப்போகிறீர்களா, இந்த வாய்ப்பை உறுதியாகப் புரிந்துகொண்டு, நம் நாட்டை முன்னேற்றத்துக்காக தங்கள் பங்கை ஆற்றத் தயாரா என்ற கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். இது வெறும் நாட்டின், அரசின் பொறுப்பு மட்டும்தானா, இது வெறும் அரசியல் நிகழ்ச்சி நிரலா? இல்லை, இது ஒரு கூட்டு முயற்சி.

உலகின் பல்வேறு நாடுகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சவால்களை எதிர்கொண்டுள்ளன. அதன் தொடக்கத்தில் இருந்தே சவால்கள் இல்லாமல் பயணித்த எந்த ஒரு நாட்டையும் உலகில் கண்டு கொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சவால்களை எதிர்கொண்டுள்ளன. அந்நாட்டின் அரசியல் அதிகாரம், அரச இயந்திரம் மற்றும் பொது மக்கள் கூட்டாக எழுந்து அந்தச் சவால்களை சமாளித்து வெற்றி பெற்றுள்ளனர். எனவே நாம் நீண்ட வரலாறுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. கடந்த 20 ஆம் நூற்றாண்டை மட்டும் நாம் நினைத்துப் பார்த்தால், ஆசியாவில் அமைந்துள்ள ஏராளமான நாடுகள் இந்த கூட்டுச் செயற்பாட்டினால் எழுச்சி பெற்றுள்ளன. ஆனால் நாம் என்ன செய்துள்ளோம்? சண்டையிட்டுக்கொண்டு, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையை உருவாக்கி, இனவாத, மதவாத, மிக அசிங்கமான அரசியல் சூதாட்டத்தில் நமது பொதுச் சமூகத்தை புதைத்து, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையையும் குரோதத்தையும் வெறுப்பையும் வளர்க்கும் ஆட்சியையே செய்துள்ளோம். மக்கள் ஒருபோதும் ஒன்றுபட்டு நிற்கத் தயாராக இல்லை என்றால், இந்தச் சவாலில் இருந்து எம்மால் மீள முடியாது. அதனாலேயே எமக்கு எழுந்து நிற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

அனைத்து பிரிவினைகளையும் முடிவுக்குக் கொண்டு வர நாம் தயாராக உள்ளோம். நாம் ஒன்றாக இலங்கையில் பிறந்தவர்கள் என்ற வகையில் இந்த நாட்டை கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைய தயாராக உள்ளோம். எனவே, இந்தக் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை பொதுமக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். இல்லையெனில், அரசாங்கத்தினாலும் அரசாங்கம் இயற்றும் சட்டங்களால் மற்றும் அரசால் நியமிக்கப்படும் அதிகாரிகளால் மாத்திரம் இதனை முழுமைப்படுத்த முடியாது. இதற்காக அரசாங்க பொறிமுறை தேவை. அதற்காக 18 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. அனைவரும் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மேலும் இந்த நோக்கத்துக்காக கிளீன் ஸ்ரீலங்கா செயலகத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், கிராமம் வரை மக்களை ஒன்று திரட்டுவதற்காக கிளீன் ஸ்ரீலங்கா சபைகளை உருவாக்க எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டம் எப்போது முடிவடையும்? இது நிறைவடையும் திட்டமல்ல. இது மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படும் உலகின் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் தன்மை மாற்றிக் கொண்டு அரசை மாற்றியமைக்கும் ஒரு வேலைத்திட்டம். இது ஓரிரு வருட திட்டமல்ல. உலகம் வேகமாக மாறி வருகிறது. உலகம் பாரிய சாதனைகளை அடைந்து வருகிறது. சமூக மனப்பாங்குகள், புதிய பெறுமதிகள் மற்றும் புதிய மதிப்புக் கட்டமைப்புகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன. அந்த விடயங்களையெல்லாம் உள்வாங்கிய புதிய இலங்கை தேசம் இந்த நாட்டில் கட்டியெழுப்பப்படுகிறது. குறிப்பாக இந்த முயற்சிக்காக தனியான நிதியமொன்றை நிறுவுகிறோம். இந்நாட்டு குடிமக்கள் அந்த நிதியத்துக்கு பங்களிக்கலாம். நிதியமைச்சினால் மேற்பார்வை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணி நாம் கூட்டு முயற்சியுடன் வெற்றிகொள்ள வேண்டிய பணியாகும். அதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கிறேன். இவற்றை சிறப்பாக நிறைவேற்ற முடியும். இந்த வருடம் இனிய வருடமாக அமைய வாழ்த்துகிறேன்’’ என்றும் தெரிவித்தார்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துக்காக இதன் போது நன்கொடையாளர்கள் நிதி அன்பளிப்புச் செய்தனர்.

மகாசங்கத்தினர், மத குருமார்கள், அமைச்சர்கள், தூதுவர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பல்வேறு துறைசார் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இன்றைய நாளில்...

- 1782 – இந்தியாவிலிருந்து திருகோணமலையை நோக்கி அட்மிரல் எட்வர்ட் ஹியூஸ் தலைமையில் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனம் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.
- 1920 – ஐக்கிய அமெரிக்காவின் பல நகரங்களில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான கம்யூனிஸ்டுகள் என சந்தேகிக்கப்படுவோர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டனர்.
- 1954 – பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் ஆகிய விருதுகளை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- 1955 – பனாமாவின் அரசுத்தலைவர் ஒசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.
- 1959 – சந்திரனை நோக்கிய முதலாவது விண்கலம் லூனா-1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1993 – யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் படுகொலை: கிளாலி நீரேரியில் 35-100 பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2004 – ஸ்டார்டஸ்ட் விண்கலம் வைல்ட்-2 என்ற வால்வெள்ளியை வெற்றிகரமாகத் தாண்டியது.
- 2006 – திருகோணமலை மாணவர்கள் படுகொலை: இலங்கையின் கிழக்கே திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் 5 தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 – மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற இலங்கைப் படையினரின் வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 40 பேர் படுகாயமடைந்தனர்.
- 2008 – விடுதலைப் புலிகளுக்கும் தனக்குமிடையே 2002இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.

## நக்கல் நமசிவாயம்

பச்சையரிசிக்கு தட்டுப்பாடு எண்டு சொல்லுகினம். அப்ப இனி பொங்கல் வரப்போகுது. எந்த அரிசியிலயாம் பொங்குறது பாருங்கோ....



# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** எதிர்கால வாழ்க்கை பற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் உதவியால் ஆனந்த மடைவீர்கள்.

**ரிஷபம்** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள்.

**மிதுனம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது.கோபத்தைக் குறைத்துக் கொண்டால் இலாபம் உண்டு.

**கடகம்** காதல் திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

**சிம்மம்** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டேயாக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**கன்னி** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள்.

**துலாம்** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

**மகரம்** உடல் நலம் சீராக இருக்கும். நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள், உதவிகள் உண்டு.

**கும்பம்** உங்கள் மதிப்பை நீங்களே கெடுத்துக்கொள்ளாதீர்கள். உணவு, உறக்கமின்றி சிரமப்படுவீர்கள்.

**மீனம்** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

**திதி:** திருதியை பி.இ.1.08 வரை பின் சதுர்த்தி
**நட்சத்திரம்:**திருவோணம் மு.இ.11.10 வரை பின் அவிட்டம்
**பிறை:** வளர்பிறை
**யோகம் :** சித்த யோகம் முழுவதும்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:** காலை- 9.23 – 12.23 மணி வரை மாலை- 4.23 – 6.23 மணி வரை
**ராகு காலம்:**1.53 – 3.22 மணி வரை
**எமகண்டம் :** 6.22 - 7.53 மணி வரை
**குளிகை** :9.22 - 10.53 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 11.10 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 11.10 மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம். பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** திருவோண விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# ரூபா 200 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டு பாவனையற்றிருக்கும் பொருளாதார மத்திய நிலையம்





(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் - தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2022ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்ட போதிலும் இன்றுவரை பயன்பாடில்லாத நிலையில் காணப்படுகின்றது.

200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு சுமார் மூன்று வருடங்களை அண்மிக்கும் நிலையில் எந்தவித பயனுமற்றுக் காணப்படுகிறது.

இந்நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைக்கும் நோக்கில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்று (01) நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதனை இயங்க வைப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென மக்களின் கருத்துகளைக் கேட்டு ஆய்வுசெய்தார்.

# அமரர் பெ. சந்திரசேகரனின் 15ஆவது நினைவு தினம்





(ஆர்.எப்.எம்.சுஹெல்)

அமரர் பெ. சந்திரசேகரனின் 15ஆவது நினைவு தினம் அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணிச் செயலாளர் நாயகமும் சந்திரசேகரனின் புதல்வியுமான அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நேற்று (01) தலவாக்கலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வை முன்னிட்டு தலவாக்கலை ட்ரூப் தோட்டத்தில் ட்ரூப் விநாயகர் ஆலயத்துக்கான இராஜகோபுர புனருத்தான பணிகளுக்கான அடிக்கல் நடப்பட்டதுடன், அமரர் சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு மலர்மாலையும் அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஏராளமான கட்சித் தொண்டர்கள் மற்றும் தலவாக்கலை ஊர் மக்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கை வங்கியின் உயர்தர சேவைகள் புது வருடத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பம்!



இலங்கையின் முதற்றர வங்கியான இலங்கை வங்கி தனது செயற்பாடுகளுடன் 2025ஆம் ஆண்டு புத்தாண்டை ஆரம்பித்ததுடன், புகழ்பெற்ற வங்கியாளர் சஞ்சிகையான ஐக்கிய இராச்சியத்தினால் 'ஆண்டின் சிறந்த வங்கி - இலங்கை - 2024' என்ற அங்கீகாரத்தை மகிழ்ச்சியுடன் அறிவித்தது.

புத்தாண்டின் ஜனவரி முதலாம் திகதி நிகழ்வு வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் தலைவர் காவிந்த டி சொய்சா மற்றும் பொது முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பென்சேகாவின் தலைமையில் நடைபெற்றது. வாடிக்கையாளர்கள், வங்கிப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் வங்கியின் நலன் விரும்பிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

புத்தாண்டை முன்னிட்டு வங்கியின் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஆசீர்வாதம் வழங்குவதற்காக தொடர்ச்சியான பல் சமய பிரசங்கங்களுடன் செயற்பாடுகள் ஆரம்பமாகின. இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்தின் வங்கியாளர் சஞ்சிகையிலிருந்து 'இலங்கை 2024ஆம் ஆண்டின் சிறந்த வங்கி' என்ற விருதுக்கான சின்னத்தை பொதுமுகாமையாளர் ரசல் பொன்சேகா மற்றும் பிரதம நிதி அதிகாரி எம்.பி.ருவன் குமார ஆகியோர் தவிசாளர் கவிந்த டி சொய்சாவிடம் கையளித்தனர்.

இந்தப் பாராட்டுக்கு மேலதிகமாக, 'ஜகானிக் விருதுகள' ஏற்பாடு செய்த மக்கள் விருதுகள் 2024இல் பெறப்பட்ட ஒரு சிறப்பு விருது வங்கியின் தலைவருக்கு வழங்கப்பட்டது. இவற்றில் 'சிறந்த சிறிய மற்றும் நடுத்தர சேவை வழங்குனர்' பட்டமும் அடங்கும். இது தனித்துவமான வங்கிச்சேவையை வழங்குவதற்காகவும் நாடு முழுவதிலும் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் இலங்கை வங்கி நிறுவனம் முன்னெடுத்துவரும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றது.

அதனைத்தொடர்ந்து வங்கியின் புதிய முயற்சியான 'ரன்லிய கடன் திட்டம்' பெண் தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது. அத்துடன், இளம் தொழில்முனைவோர்களுக்காக பிரத்தியேகமாக இலங்கை வங்கி இளைஞர் கடன் திட்டத்தை மீண்டும் தொடங்கியது.

ஒரு பொறுப்புணர்வுள்ள பெருநிறுவனப் பிரஜை என்ற வகையிலும் அனைத்து இலங்கையர்களினதும் நம்பகரமான நிதியியல் பங்காளர் என்ற வகையிலும் டிஜிட்டல் மயப்படுத்தப்படும் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வங்கிச்சேவை ஊடாக சமூக மற்றும் சுற்றாடலுக்கான அதன் அர்ப்பணிப்பை அர்த்தமுள்ள வகையில் நிறைவேற்றுவதை நோக்கி இலங்கை வங்கி தொடர்ந்தும் உறுதியான முன்னேற்றங்களை அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைபேசி விற்பனை நிலையத்தை உடைத்து பொருட்கள் திருட்டு

(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் ரயில் கடவைக்கருகாமையில் இயங்கி வந்த கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமொன்று உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருட்கள் நேற்று முன்தினம் (31) நள்ளிரவு களவாடப்பட்டிருந்தன.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பகட்ட விசாரணையில், கடையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் 20 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிக்கத்தக்க கைபேசி மற்றும் கைக்கடிகாரங்கள் என்பன களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (01.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 176.9470 | 186.3127 |
| கனேடியன் டொலர் | 199.4363 | 208.4241 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.7434 | 41.3246 |
| யூரோ | 297.5300 | 310.1899 |
| ஜப்பான் யென் | 1.8321 | 1.9039 |
| சிங்கப்பூர் டொலர் | 209.9309 | 219.8249 |
| ஸ்ரேலிங் பவுன் | 359.9364 | 374.4170 |
| சுவிஸ் பிராங்க் | 315.5994 | 330.9854 |
| ஐ.அ. டொலர் | 289.0808 | 297.6536 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 777.2161 |
| குவைட் | குவைட் தினார் | 950.5359 |
| ஓமான் | ஓமான் றியால் | 761.0756 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.3793 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.9802 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.7720 |

**குற்றம் தவிர்**

## மண்வெட்டியால் தாக்கி பெண் ஒருவர் கொலை – குளியாப்பிட்டி

குளியாப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் (31) இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் பெண்ணொருவர் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பரகாரூப, தீகல்ல பகுதியில் வசித்த 37 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரின் சடலம் குளியாப்பிட்டி வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரைக் கைதுசெய்ய குளியாப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மரம் முறிந்து விழுந்ததில் இளைஞன் பலி - மாவனெல்லை

மாவனெல்லை பொலிஸ் பிரிவிலுள்ள அம்புலுகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (31) பாக்கு மரத்தில் இளைஞனொருவர் ஏறிய நிலையில் மரம் முறிந்ததால் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாவனெல்லை, அம்புலுகல பகுதியில் வசித்த 16 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் இன்னொரு இளைஞனுடன் கூலிக்காக பாக்குப் பறிக்க ஏறியபோதே இவ்வாறு மரம் முறிந்ததில் இவர் உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞனின் சடலம் மாவனெல்லை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி - ஹங்கமுவ

எலபாத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹங்கமுவ பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விலங்குகளிடமிருந்து வயலைப் பாதுகாப்பதற்காக வயலில் பொருத்தப்பட்டிருந்த சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி இரத்தினபுரி ஹங்கமுவ பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் ஹங்கமுவ வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹங்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது - கல்கிஸை

கல்கிஸை, ஹத்தரகேட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் (31) நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஒரு கிராம் 270 மில்லி கிராம் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதானவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது - வாதுவ

வாதுவ பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது 05 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாதுவ பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

### மொரட்டுவ

மொரட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுபெத்த பிரதேசத்தில் பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 420 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ரத்மலான பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடையவராவார். இச்சம்பவம் தொடர்பில் மொரட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கொழும்பு

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதுல்லவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (31) இரவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 12 கிராம் 490 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோத மதுபானம், சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 125 மதுபானப் போத்தல்கள் மற்றும் 8,960 சிகரெட்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு -14 இல் வசிக்கும் 43 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி இருவர் வைத்தியசாலையில்

புசல்லாவை பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 10 பேர் புசல்லாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புசல்லாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 10 பேரில் மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளாரென வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## முச்சக்கரவண்டி விபத்தில் சிறுவன் பலி

வவுனியா, பாவக்குளத்தில் பஸ் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் மோதி இடம்பெற்ற விபத்தில் 7 வயது சிறுவனொருவர் உயிரிழந்துள்ளதாக உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (31) முச்சக்கரவண்டியை பாவக்குளத்தில் நிறுத்திவிட்டு வீதியின் குறுக்கே பஸ்ஸைச் செலுத்த முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அங்கு பயணித்த 7 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பிறக்கும் ஒவ்வொரு புத்தாண்டுக்கும் வாழ்த்துகள் கூறினாலும் எமது வாழ்க்கை சிறப்பாக இருந்ததில்லை

## பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன



(பொகவந்தலாவ நிருபர்)

''பிறக்கும் ஒவ்வொரு புத்தாண்டிலும் வாழ்த்துகள் கூறினாலும் எமது வாழ்க்கை சிறப்பாக இருந்ததில்லை'' என பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் கே.ஏ.வித்யாரத்ன தெரிவித்தார்.

அமைச்சுக்கு நேற்று (01) விஜயம் மேற்கொண்டு அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் கஷ்டப்பட்டு முன்வந்தால் மாத்திரமே எமது வாழ்க்கை சிறப்பாக இருக்கும். கடந்த காலங்களை நாம் திரும்பிப் பார்த்தால் சாதித்த விபரங்களும் சாதிக்க முடியாத விபரங்களும் இருந்திருக்கும்.

பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினூடாக பாரிய வேலைத்திட்டத்தை மேற்கொள்ள ஜனாதிபதி எம்மிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளார். அதற்கான வளங்களையும் வழங்கியுள்ளார். இந்த வருடத்தில் இந்த அமைச்சினூடாக சிறந்த வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி முதல் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதிவரை நமது நாடு சுதந்திரமடைந்து 77 வருடங்களாகின்றன. நமது நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து இன்றுவரை நாம் அனைவரும் சிறப்பாக செயற்பட்டிருந்தால் நாடு ஒரு சிறந்த நிலைமைக்கு வந்திருக்கும்.

எமது நாட்டுக்குப் பிறகு சுதந்திரமடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துள்ளன. இன்று ஜப்பான் நாட்டையும் நமது நாட்டையும் எடுத்து நோக்கினால் வித்தியாசம் தெரியும். நமது நாடு இன்னும் வங்குரோத்தடைந்து கடன் செலுத்த முடியாத நிலையில் உள்ளது. 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தில் மாற்றமொன்று இடம்பெறவேண்டுமென எதிர்ப்பார்த்தனர். எமது அமைச்சில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா அல்லது தொடர்ந்தும் பழைய முறையில் இயங்குகிறதா என சிலர் நினைக்கிறார்கள். அரசியல்வாதிகள் மாற்றமடைந்தால் முழு நாடும் மாற்றமடையுமென நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது.

வாக்களித்த மக்கள் எதிர்ப்பார்க்கும் மாற்றத்தை நாங்கள் கொண்டுவர வேண்டும். ஆகையால் பழைய முறையிலிருந்த அமைச்சர்கள்போல் எம்மால் செயற்பட முடியாது. நாங்கள் புதிய விடயங்களை எதிர்பார்க்கின்றோம். புதிய நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் நாட்டு மக்களையும் புதிய யுகத்துக்கு மாற்ற வேண்டும்.

இன்றுமுதல் 'கிளீன் ஸ்ரீ லங்கா' என்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த அமைச்சிலும் இதற்கு முன்பும் இதுபோன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். அதற்கு அநேகமான பணமும் செலவு செய்திருக்கலாம். எமது வேலைத்திட்டத்தில் அவ்வாறு நடக்க இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் ஊடாக நகர்ப்புறங்களுக்கும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவிருக்கின்றோம் - என்றார்.

# கொரியாவில் இலங்கை மீனவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை அதிகரிக்குக!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

இலங்கை மீனவர்களின் தொழில் வாய்ப்பை அதிகரித்தல், பயிற்சி வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் எனும் நோக்கில் கொரியாவின் தொழிற்சந்தையில் இலங்கை மீனவர்களுக்குத் தொழில் வாய்ப்பை அதிகரிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் கொரிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.



அமைச்சர் மற்றும் இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன் லீ உடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது அமைச்சர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவத்துக்காக இரு தரப்பு இணக்கம் மற்றும் ஒத்துழைப்பை மேலும் முன்னேற்றுதல் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கைக்காக கொரிய நாட்டால் வழங்கப்படும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகள் மற்றும் வலுவான தொடர்புகள் குறித்து அமைச்சர் இதன்போது தமது நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன், தென் கொரியாவில் சமீபத்தில் இடம்பெற்ற விமான விபத்து குறித்தும் தமது அனுதாபங்களை அமைச்சர் பகிர்ந்து கொண்டார்.

# ஹப்புத்தளையில் வேன் விபத்து இருவர் பலி – 12 பேர் காயம்

(எம்.ஏ.எம்,ஹசனார்)

ஹப்புத்தளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் 12 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரண, ரட்டியால பிரதேசத்திலுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 15 பேர் வேனில் அநுராதபுரத்துக்குச் சென்று ஹொரணக்குத் திரும்பும்போதே நேற்று முன்தினம் (31) மாலை ஹப்புத்தளையில் விபத்து சம்பவித்துள்ளது.

கட்டுப்பாட்டையிழந்த வேன் பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாகவும் அதில் பயணித்த 15 பேரில் 12 பேர் காயமடைந்ததுடன், இருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தனர். ஒரு குழந்தை காயம் ஏதுமின்றி தப்பியுள்ளதாகவும் ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை தள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களுள் நான்கு பேரின் நிலைமை கவலைக் கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.விபத்து குறித்து ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூர்த் துப்பாக்கியுடன் நபரொருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

உள்ளூரில் தயாரித்த துப்பாக்கியொன்றைப் பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த நபரொருவரை அநுராதபுரம் ஒயாமடுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வலய புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் (31) பகல் ஒயாமடுவ மாணியங்கமுவ பகுதியில் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தியதாக கூறப்படும் துப்பாக்கியையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 56 வயதுடைய எலயாபத்துவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவரென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம், ஒயாமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமது இரங்கலைத் தெரிவித்ததுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் பதிவேட்டிலும் கையொப்பமிட்டனர்.

# புத்தாண்டை முன்னிட்டு சிறப்புப் பூஜை வழிபாடுகள்



(எஸ்.கணேசன்)

உலகெங்கிலும் நேற்று (01) ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வுகள் இடம்பெற்ற நிலையில், மலையகத்திலும் புதுவருட கொண்டாட்டங்களும் வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன.

புத்தாண்டை முன்னிட்டு கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் குருக்கள் ஸ்ரீகாந்தன் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்படவும் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் சிறப்புப் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அன்றைய தினம் பெருமளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகைதந்து நெய் விளக்கு ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், தங்களுக்குள் வாழ்த்துகளும் தெரிவித்துக்கொண்டதைக் காணமுடிந்தது.

அத்தோடு கிறிஸ்தவ தேவாலயங்களில் புதுவருட ஆராதனைகளும் பள்ளிவாசலில் விசேட தொழுகைகளும் இடம்பெற்றதோடு, விகாரைகளிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



43ஆவது தேசிய இளைஞர் நாடக விழாவின் குறுநாடகப் பிரிவின் நாடகங்கள் நேற்று முன்தினம் (31) மருதானை டவர் அரங்கில் மேடையேற்றப்பட்டன. ஐந்தாவது நாளான நேற்று முன்தினம் அகிலேஷ்வரன் கிருஷ்ணராஜின் 'இளவந்திகை' நாடகம் மேடையேற்றப்பட்டது. இதன்போது தமிழ்ப் பிரிவின் விசேட அதிதிகளாக மூத்த நாடக கலைஞர்களான பொன். பத்மநாதன், விஜயராஜ், நவயுகா குகராஜா, நடராஜா மணிவண்ணன், ஈஸ்வரலிங்கம், முஹம்மத் நசார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தியாகராஜா மகேஸ்வரனின் 17ஆவது ஆண்டு நினைவுதினம் வட்டுக்கோட்டையில் அனுஷ்டிப்பு

(பு.கஜிந்தன்)

கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் தியாகாராஜா மகேஸ்வரனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று (01) வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.



ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக் கோட்டை தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பூஜை வழிபாடுகள் இடம் பெற்றதுடன், ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் விஜிமருதன், மதகுருமார்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களைக் களைவது குறித்து எழுதி, விரைவில் வெளியிடவுள்ள 'நாங்கள் வேறானவர்கள் அல்ல, மண்ணின் வேரானவர்கள்' என்ற நூலை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீன், அதன் மாநில முதன்மை துணைத் தலைவர் எம்.அப்துல் ரஹ்மான் ஆகியோருக்கு அந்தக் கட்சியினர் சிலர் முன்னிலையில் சென்ற வாரம் திருச்சியில் வைத்து வழங்கியபோது ....

# புதிய வருடத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்

(ஜோசப் நயன்)

2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வானது நேற்று (01) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபரால் தேசியக் கொடியை ஏற்றியதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' (Clean Sri Lanka) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

அத்துடன், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற 'க்ளீன் ஸ்ரீ லங்கா' தேசிய வேலைத்திட்ட நிகழ்வில் உத்தியோகத்தர்கள் குறித்த நிகழ்வின்போது நேரலை ஊடாக இணைந்திருந்தனர்.

குறித்த நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர்கள், பதவிநிலை அலுவலர்கள், மாவட்ட செயலக அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





புத்தாண்டுப் பணிகளை ஆரம்பித்து வைத்து 'கிளீன் ஸ்ரீ லங்கா' (Clean Sri Lanka) உறுதிமொழி வழங்கும் நிகழ்வு நேற்று (01) நிதியமைச்சில் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தலைமையில் இடம்பெற்றது. கருவூல துணைச் செயலாளர்கள், துறைகளின் இயக்குநர் ஜெனரல்கள் மற்றும் பிற அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அதன் பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் பிரதி அமைச்சர்களான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் கலாநிதி ஹர்ஷன சூரியபெரும ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# திருமலை அரச அதிபர் சாமிந்தவுக்கு பிரியாவிடை



**(சீனக்குடா செய்தியாளர்)**

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சாமிந்த ஹெட்டியாரச்சி இடமாற்றம் பெற்று, ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை வைபவம் செவ்வாய்க்கிழமை (31) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2023.07.27 ஆம் திகதி முதல் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இவர், குறுகிய காலத்தில் மாவட்ட மக்களுக்கு இன, மத, மொழி வேறுபாடின்றி அளப்பரிய சேவை வழங்கியுள்ளார். மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கு நேரடியாகக் கள விஜயம் மேற்கொண்டு மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் உரிய திணைக்களங்களைத் தொடர்பு கொண்டு ஒருங்கிணைத்து செயற்படுவதிலும் தனித்தன்மை வாய்ந்தவர்.

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட இவர், 2000 - 2006 ஆம் ஆண்டுவரை திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், மின்சக்தி - வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



***புத்தாண்டை முன்னிட்டு காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் நேற்று அதிகாலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.இந்நிகழ்வில் காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி,உத்தியோகத்தர்கள் மற்றும் பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். (காரைதீவு செய்தியாளர்)***





***கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2025 கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வாக அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.சீ.றிஸ்வான், மேலதிக மாவட்ட நீதிபதி ரெசீபா ரஜீவன் உட்பட பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)***





***கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்ன தலைமையில் நேற்று(01) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது சத்தியப்பிரமாணம் இடம்பெற்றதுடன் நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து மரக்கன்றுகளும் நடப்பட்டன. (காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)***

# வாணவேடிக்கைகளுடன் புதிய ஆண்டை வரவேற்ற மட்டு. நகர்







**(வீரமுனை செய்தியாளர்)**

புதிய ஆண்டை வரவேற்கும் வகையில் மட்டக்களப்பு நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டிருந்ததுடன் வாணவேடிக்கைகளும் இடம்பெற்றதை நேற்று நள்ளிரவு காணக் கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு நகரின் காந்திபூங்கா மற்றும் மணிக்கூண்டு கோபுரம் என்பன புத்தாண்டை வரவேற்கும் வகையில் மின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு நகர் ஒளிமயமாகக் காட்சியளித்தது. இதனைக் கண்டுகளிப்பதற்காகவும் நள்ளிரவு புதுவருட பிறப்பின்போது நடத்தப்படும் வாணவேடிக்கையைக் கண்டுகளிப்பதற்காகவும் ஆயிரக்கணக்கான மக்கள் நகரில் ஒன்றுகூடியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து மட்டக்களப்பு நகருக்குள் நேற்று நள்ளிரவு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டதன் காரணமாக வீதியில் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது. எனினும், மக்கள் புதிய ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்கவேண்டுமென்பதற்காக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்ததுடன் போக்குவரத்துகளை இலகுபடுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

புதிய ஆண்டு மகிழ்ச்சியான ஆண்டாக அமைய இதன்போது மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டதையும் காணமுடிந்தது.





***கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக 2025ஆம் வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (01) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பிராந்திய பணிமனையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒலுவில் செய்தியாளர்)***





***கிண்ணியா பிரதேச செயலகத்தில் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டம் பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் பிரதேச செயலக முன்றிலில் நேற்று(01) ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த அனைவருக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு ஒருங்கிணைந்து பணியாற்ற சத்தியப்பிரமாணமும் செய்துகொண்டனர். (சீனக்குடா செய்தியாளர்)***



***தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் புதிய ஆண்டுக்கான கடமை பொறுப்பேற்பும் உறுதிமொழி எடுத்தலும் மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பமும் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று(01) இடம்பெற்றது. இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கிண்ணியா செய்தியாளர்)***



***சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முதல்நாள் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே.மதன் தலைமையில் நேற்று(01) இடம்பெற்றது. இதன்போது அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)***



# தொல்லியல் துறையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீண்டும் பயன்படுத்த அனுமதிகோரி கண்டன ஆர்ப்பாட்டம்

## குச்சவெளி விவசாயிகளால் முன்னெடுப்பு





(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச பகுதியில் நேற்று(01) குச்சவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட விவசாயிகளினால் தொல்லியல் துறையினருக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் குச்சவெளி பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 வரையான காலப்பகுதிகள் வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய நெற்களஞ்சியசாலையாக விளங்கிய குறித்த இடத்தில் 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் குச்சவெளி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக இயங்கி வந்தது. கடந்த ஆண்டு குச்சவெளி பொலிஸ் நிலையம் அவ்விடத்தில் இருந்து இடமாற்றப்பட்டதையடுத்து குறித்த இடம் மீண்டும் நெற்களஞ்சியசாலையாக இயக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், கடந்த டிசம்பர் 28ஆம் திகதி இரவு வேளையில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தினரால் அவ்விடம் தொல்லியல் திணைக்களத்துக்குரிய இடமென பதாகை வைக்கப்பட்டு தொல்லியல் துறை வசமானது.

ஏற்கனவே அவ்விடத்தில் தொல்லியல் துறைக்கென அதிலிருந்து நான்கு ஏக்கர் நில அளவு காணி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு மேலும் அதிகமாக அடாவடியாக தொல்லியல் துறையினர் காணிகளைத் தம்வசப்படுத்தியிருக்கின்றனர். குறித்த இடமானது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய இடமாக விளங்குவதோடு இந்துக்கோயில், முஸ்லிம் பள்ளிவாசல், சிங்கள விகாரை போன்றன குறித்த இடத்தில் மிக அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட அநேகமான காணிகள் தொல்லியல் துறையினரால் அடாவடியான முறையில் கையகப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குறித்த நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கோரி குச்சவெளி பிரதேச விவசாயிகள் ஒன்றுகூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியதோடு உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வைப்பெற்று அந்தக் காணியை மீண்டும் நெற்களஞ்சியசாலையாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு கோரி குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.




**கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக அரச ஊழியர்களின் 2025 புதிய வருடத்துக்கான சத்தியப்பிரமாணம் நேற்று (01) காலை 9.00 மணிக்கு மூதூர் பிரதேச சபைச் செயலாளர் வீ.சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மூதூர் பிரதேச சபையில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 2025 புதிய ஆண்டுக்கான சத்தியப்பிரமாணத்தைச் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (மூதூர் செய்தியாளர்)**




**கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மற்றும் புத்தாண்டு கடமை ஆரம்பிப்பு நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்று (01) இடம்பெற்றது. இதன் முதல் நிகழ்வாக தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந் நிகழ்வின் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஆரம்ப நிகழ்வை முன்னிட்டு மாவட்ட செயலக வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது. (மட்டக்களப்பு)**



**கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக 2025ஆம் ஆண்டின் கடமை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று(01) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது தேசியக்கொடி ஏற்றப்பட்டு மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றதுடன், நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.**

**(எருவில், குருக்கள்மடம் செய்தியாளர்கள்)**



**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2025 முதல்நாள் வேலைகளை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாணமும் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் தலைமையில் நேற்று(01) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பதில் உபவேந்தர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.**

# புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் புதுவருட வரவேற்பு நள்ளிரவு ஆராதனை




(மட்டக்களப்பு செய்தியாளர்)

புதுவருடப் பிறப்பை வரவேற்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் நள்ளிரவு ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

அந்தவகையில், மாவட்டத்தின் முதல் பேராலயமாக உள்ள மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. புனித மரியாள் பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் தலைமையில் விசேட கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது பொருளாதார நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் நாட்டில் நீடித்த அமைதியும் மகிழ்ச்சியும் நிலவ விசேட பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைவருக்கும் அருட்தந்தையர்களினால் அருளாசி வழங்கப்பட்டது. இப்புதுவருட ஆராதனையின்போது ஆலயத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஓட்டமாவடி பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்க உடனடி நடவடிக்கை எடுங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. வேண்டுகோள்



மட்டக்களப்பு அரபா நகர், மஜ்மா நகர் பிரதேச மக்களுக்கு இதுவரை குடிநீர் வசதி கிடைக்கவில்லை. நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை சந்திவெளி திட்டம் முடிவடைந்தவுடன் குடிநீர் வழப்படுமென உறுதி வழங்கியிருந்தது. ஆனால், தற்போது சந்திவெளி நீர்த்திட்டம் முடிவடைந்த நிலையிலும் அந்தக் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு உடனடியாக குடிநீர் வசதிகளை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள் விடுத்தார்.

திங்கட்கிழமை (30) நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்டப் பிராந்திய பொறியியலாளர், தற்போது சந்திவெளி குடிநீர்த்திட்டம் முடிவடைந்தாலும் பாசிக்குடா ஹோட்டல்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதால் நீரின் அழுத்தம் போதாமையுள்ளது. இதனால் குடிநீரை இப்பிரதேச மக்களுக்கு வழங்க முடியாமல் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஹிஸ்புல்லாஹ் எம்.பி., இக்கிராம மக்களுக்கு கிணற்றிலிருந்துகூட நீர் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. மக்களுக்கு நீர் வசதிகளை வழங்குவது உங்களது கடமை. உடனடியாக இந்தக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குங்கள் எனத் தெரிவித்ததையடுத்து மாவட்ட அபிவிருத்திக்குழு இதனை ஏற்றுக்கொண்டு இக்கிராம மக்களுக்கு உடனடியாக குடிநீர் வசதிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்டப் பிராந்திய பொறியியலாளருக்கு பணிப்புரை வழங்கியது.

# இலங்கையில் மட்டக்களப்பு மாநகரசபை முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்

## புதிய ஆணையாளர் தனஞ்செயன்




(வீரமுனை செய்தியாளர்)

அரச உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் நீதியானதும் நேர்மையானதும் பக்கச்சார்பற்றதும் இலஞ்சம், ஊழல், தரகுப்பணம் பெறும் நிலைமைகள் அற்ற மாநகரசபையாக மட்டக்களப்பு மாநகர சபையைக் கட்டியெழுப்பி மக்களுக்கான சேவையை வழங்கவேண்டும். சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்து இலங்கையில் முதன்மையானதும் முன்னுதாரணமான மாநகர சபையாகவும் மட்டக்களப்பு மாநகர சபையை மாற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவையாகும் என மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராகக் கடமையேற்ற என்.தனஞ்செயன் தெரிவித்தார்.

புதிய ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்கள் கடமையேற்கும் நிகழ்வும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று(01) நடைபெற்றன. இதன்போது புதிய ஆணையாளராகக் கடமையேற்று ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''பொதுமக்கள் பல தேவைகளுக்காக மாநகர சபைக்கு வருகின்றனர். அவர்களை இன்முகத்துடன் வரவேற்று சிறப்பான சேவையை வழங்கவேண்டியது உத்தியோகத்தர்களின் கடமையாகும். புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் நாட்டிலும் மாகாணங்களிலும் பல மாற்றங்கள்இடம்பெறுகின்றன. அந்த அடிப்படையில் இந்த மாநகரத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும், அர்ப்பணிப்புமிக்க சேவையை பொதுமக்களுக்கு வழங்கவேண்டும்.

கழிவகற்றும் செயற்பாடுகளில் மக்களின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். கடந்த காலத்தில் வீதிகளில் குப்பைகளை வீசிச்சென்ற நிலைமையும் காணப்பட்டது. வரியிறுப்பாளர்கள் இந்தக் கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எதிர்காலத்தில் குப்பைகளைச் சேகரிக்கும் பணிகள் குறித்த நாளில் குறித்த நேரத்தில் முன்னெடுக்கப்படுமென்பதை நான் உறுதிப்படுத்துவேன். அந்தவேளையில் குப்பைகளைத் தரம்பிரித்து வழங்கவேண்டும்.

மட்டக்களப்பு மாநகரசபை பகுதியானது அதிகளவான சுற்றுலாப்பயணிகள், வெளிநாட்டவர்கள் வந்துசெல்லும் இடம். அவர்கள் விரும்பும் வகையில் அழகான, பசுமையான மாநகரசபையாக மாற்றுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும். அதேபோன்று பொதுமக்கள் தங்களது வரிகளை உரிய காலப்பகுதிக்குள் செலுத்தவேண்டும். மக்கள் வரிநிலுவைகளைச் செலுத்தி மாநகரசபையின் வருமானத்தை அதிகரிக்கும்போது எந்த ஊழல்களும் இல்லாமல் அந்த நிதி மீண்டும் மக்களுக்கான சேவையாக வழங்கப்படுமென்பதை நான் ஆணையாளர் என்ற வகையில் உறுதியளிக்கின்றேன்''- என்றார்.




**கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக 2025ஆம் ஆண்டுக்கான அரச கடமைகளை ஆரம்பித்தல் அரசாங்க சேவை சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (01) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.**

**(பாறுக் ஷிஹான்)**



**ஏறாவூர் நகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் புத்தாண்டு சத்தியப்பிரமாண நிகழ்வு செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் தேசிய கொடியேற்றல் மற்றும் தேசியக் கீதம் இசைத்தலுடன் நடைபெற்றது.**

**(ஏறாவூர் செய்தியாளர்)**

# புத்தாண்டில் மலையக மக்கள் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு





(எஸ்.கணேசன்)

''தை பிறந்த கையோடு மலையக மக்கள் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கை ஆரம்பமாகும்'' - என்று மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 15ஆவது சிரார்த்த தினம், நேற்று (01) பிற்பகல் 2 மணியளவில் ஹட்டனில் மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம், முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் புஷ்பா விஸ்வநாதன், நிதிச் செயலாளர் தாளமுத்து சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர் பெ.சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு முதல் மலர்மாலையை முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வே.இராதாகிருஷ்ணன் அணிவித்தார்.

இதனையடுத்து அதிதிகள் நினைவுச்சுடர் ஏற்றியதுடன், அங்கு கலந்துகொண்ட பொது மக்களும் நினைவுச்சுடர்களை ஏற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்கள் முன்னணி தனித்துவமான கட்சியாகும். அக்கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டுமென மக்கள் தரப்பினிடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய விசேட குழுவொன்றை அமைத்திருந்தோம்.

அந்தக் குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைக்களுக்கமைய எதிர்வரும் பொங்கலுக்கு பின்னர் மறுசீரமைப்புப் பணி இடம்பெறும்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம். அத்தேர்தலை மலையக மக்கள் முன்னணி தனித்து எதிர்கொள்ள வேண்டுமென கட்சி உறுப்பினர்கள் சிலர் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கைகள் குறித்தும் பரிசீலித்து வருகின்றோம். பாராளுமன்றத் தேர்தலில் சில மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் சிந்தித்து வாக்களித் திருந்தால் இன்னும் இரு தமிழ்ப் பிரதிநிதிகளை தெரிவுசெய்திருக்கலாம். எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய வகையில் தமிழ் மக்கள் கையாள வேண்டும் - என்றார்.

# கொவிட் -19 மரணங்கள் தகனம்:

## தெரிவுக்குழு நியமிக்குமாறு ஹக்கீம் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை


கொவிட்-19 தொற்றுநோயால் உயிரிழந் தவர்களின் சடலங்களை (ஜனாஸா) பலாத்காரமாகத் தகனம் செய்தமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு பொருத்த மான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்துக்குத் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்.

விவாதத்துக்கு திகதி குறிப்பிடப்படாத அந்தப் பிரேரணை (பா.28/2024)பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரஸ்தாப பிரேரணையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கொவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த நிலையில், மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதால் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாய நிலை உள்ளதாகக் கூறி கடந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கையளவிலான தீர்மானத்தின்படி செயற்பட்டமையும் அந்தச் சடலங்களை உறவினர்களின் உடன்பாடின்றி தகனம் செய்தமையும் பின்னர் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டமை சரியானதல்ல தவறு என்று தெரிவித்து அரசாங்கமே உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியிருந்தமையும் இந்தத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாமையும் இது குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக ஓட்டமாவடியில், மஜ்மா நகர் எனப்படும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், குடும்ப உறவினர்கள் இறுதி கடமைகளைச் செய்வதற்கோ மரியாதை செலுத்துவதற்கோ உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பிலும் இந்த விவகாரத்தில் அரசாங்கம் பாரதூரமான தவறுகளைப் புரிந்துள்ளமையினாலும் குறிப்பிட்ட விடயங்களை உரிய முறையில் விசாரணை செய்து பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு வொன்றை நியமிக்கும்படியாக அந்தப் பிரேரணையில் (பா 28/2024) குறிப்பிடப் பட்டுள்ளது.





புது வருடத்தை முன்னிட்டு 'தமிழன்' பத்திரிகையின் லிபர்ட்டி பப்ளிசர்ஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு பூஜை வழிபாடுகள் அதன் கொழும்பு தலைமையகத்தில் நேற்று (01) காலை இடம்பெற்றது. இந்நிகழ்வு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்திரசேன தலைமையில் இடம்பெற்றதுடன், ஊழியர்களும் கலந்துகொண்டனர். (படப்பிடிப்பு - வெனுர சந்திரமாலித)

# டென்னிஸ் உலகின் 2024இல் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் ஓர் பார்வை



டென்னிஸ் உலகில் உயர்ந்த போட்டிகளாக கருதப்படும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் ஓர் ஆண்டில் 04 முறை நடைபெறுகிறது. அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன் ஓபன், அமெரிக்க ஓபன் போன்ற தொடர்கள் ஓர் ஆண்டில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் தொடர்களாகும்

**அவுஸ்திரேலியா ஓபன்**

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற அவுஸ்திரேலிய ஓபனில் சின்னர், ருப்லேவ், ஜோகோவிச், பிரிட்ஸ், ஸ்வெரேவ், அல்காரஸ், கர்காஸ், மெட்வதேவ் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர்.

ருப்லேவ்வை சின்னர் 3:0 என வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். ஜோகோவிச் 3:1 என பிரிட்ஸை வீழ்த்தினார். ஸ்வெரேவ் அல்காரசை வீழ்த்தினார். மெட்வெதேவ் ஐந்து செட்கள் போராடி கர்காஸை வீழ்த்தினார். அரையிறுதியில் ஸ்வெரேவை மெட்வெதேவ் கடும் போராட்டத்துக்கு பின் 3:2 என்ற செட் கணக்கில் வென்றார். ஜோகோவிச்சை 3:1 என சின்னர் வீழ்த்தினார். மெட்வெதேவ் - சின்னர் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தினர். இதில் சின்னர் 3:6, 3:6, 6:4, 6:4, 6:3 என வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

**பிரெஞ்ச் ஓபன்**



மே - ஜூன் மாதங்களில் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபனில் காலிறுதி போட்டிகளில் டிமிட்ரோவை 3:0 என சின்னர் எளிதாக வென்றார். ஸ்வெரேவ் 3:0 என டி.மினாயுரை வீழ்த்தினார். அல்காரஸ் டிசிட்சிபாசை 3:0 என வீழ்த்தினார். ஜோகோவிச் காயம் காரணமாக வெளியேறியதால் ரூட் அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதியில் ரூட்டை ஸ்வெரேவ் 3:1 என வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதி போட்டியில் அல்காரஸ் 3:2 என கடும் போராட்டத்துக்குப் பின் சின்னரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

ஸ்வெரேவ் - அல்காரஸ் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தினர். இறுதிப் போட்டி ஐந்து செட்கள் வரை நீடித்தது. இறுதியாக அல்காரஸ் 6:3, 2:6, 7:5, 6:1, 6:2 (3:2) என வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

**விம்பிள்டன் ஓபன்**



ஜூன்- ஜூலை மாதங்களில் நடைபெற்ற விம்பிள்டன் ஓபன் காலிறுதிப் போட்டிகளில் அல்காரஸ் 3:1 என டி.பாலை வீழ்த்தினார். மெட்வெதேவ் 3:2 என சின்னரை வீழ்த்தினார். பிரிட்ஸை 3:2 என முசெட்டி வீழ்த்தினார். டி. மினாயுர் காயம் காரணமாக வெளியேற ஜோகோவிச் வெற்றி பெற்றார்.

அரையிறுதியில் முசெட்டியை 3:0 என ஜோகோவிச் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் மெட்வெதேவை 3:1 என அல்காரஸ் வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் அல்காரஸ் - ஜோகோவிச் பலப்பரீட்சை நடத்தினர். இதில் அல்காரஸ் 3:0 என எளிதாக வீழ்த்தினார்.

**அமெரிக்க ஓபன்**



ஒகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் நடைபெற்ற அமெரிக்க ஓபனில் முதல் காலிறுதியில் ஸ்வெரேவை 3:1 என பிரிட்ஸ் வீழ்த்தினார். 2ஆவது காலிறுதியில் டிராபர் 3:0 என டி மினாயுரை வீழ்த்தினார். 3ஆவது காலிறுதியில் தியாஃபோ 3:1 என டிமிட்ரோவை வீழ்த்தினார். 4ஆவது காலிறுதியில் 3:1 என மெட்வெதேவை 3:1 என சின்னர் வீழ்த்தினார்.

அரையிறுதியில் தியாஃபோவை 3:2 என பிரிட்ஸ் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் டிராப்பரை 3:0 என சின்னர் வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் சின்னரை 3:0 என எளிதாக பிரிட்ஸை வீழ்த்தி சம்பி யன் பட்டம் வென்றார். நான்கு கிராண்ட் ஸ்லாம்களில் சின்னர் அவுஸ்திரேலியா ஓபன், அமெரிக்க ஓபனை வென்றார். அல்காரஸ் பிரெஞ்ச் ஓபன் மற்றும் விம்பிள்டன் ஓபனை கைப்பற்றினார்.

# நியூஸிலாந்துடன் ஆறுதல் வெற்றியீட்டி அதை 18 ஆண்டுகளின் பின்னரான சாதனை வெற்றியாக பதிவுசெய்யுமா இலங்கை?

(அகீல் சிஹாப்)




சுற்றுலா இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி20 சர்வதேச போட்டி இன்று அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாக திட்டமிடப்பட்டிருந்தது. முன்னதாக நடைபெற்ற இரு போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரை இழந்துள்ள இலங்கை அணி இன்றைய போட்டியில் ஆறுதல் வெற்றிபெறும் முனைப்பில் உள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைப்பந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கிடையில் 03 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் மற்றும் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் என்பன நடைபெறவுள்ளன. இதில் முதல் தொடரான ரி20 தொடரின் முதல் இரு போட்டிகளிலும் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்று தொடரை வசப் படுத்தியுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் இலங்கை அணி ஆறுதல் வெற்றிபெறும் முனைப்பில் உள்ளது. இந்த ஆட்டத்திலாவது இலங்கை அணி வெற்றிபெற்றால் நியூஸிலாந்து மண்ணில் 18 ஆண்டுகளின் பின்னர் ரி20 போட்டி ஒன்றில் வெற்றியீட்டிய சம்பவத்தை பதிவுசெய்யும்.

இலங்கை அணி கடைசியாக 2006 டிசம்பர் 22 ஆம் திகதி வெலிங்டனில் நடந்த ரி20 போட்டியிலேயே வெற்றியீட்டியது. அது தொடக்கம் இலங்கை அணி நியூஸிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆடிய 09 ரி20 போட்டிகளில் 08 தோற்றியிருப்பதோடு ஒரு போட்டி சமநிலை பெற்றது.

# இலங்கை – ஆஸி. அணிகள் மோதும் ஒருநாள் போட்டி ஹம்பாந்தோட்டையில்

(அகீல் சிஹாப்)


ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நிலையில் விளையாடவுள்ள ஒருநாள் போட்டிக்கான மைதானமாக ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2023 - 2025 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி விளையாடும் இறுதி டெஸ்ட் தொடராக குறித்த இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அமையவிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்காக இலங்கை அணியுடன் ஒரேயொரு ஒருநாள் போட்டியிலும் விளையாடவுள்ளது.

முன்னதாக இரண்டு டெஸ்ட் போட்டிகளும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஒருநாள் போட்டிக்கான மைதானமாக ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த டெஸ்ட் தொடர் ஜனவரி மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நிறைவடைகிறது. ஒருநாள் போட்டி 13ஆம் திகதி நடைபெறுகிறது. குறித்த தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி ஜனவரி மாதம் 20ஆம் திகதி இலங்கை வருகிறது.



1 TEAM 1 NATION
Sri Lanka Cricket

**Media Release**

1st January 2025

**Women's Cricket: Bangladesh U19 Tour of Sri Lanka 2025**

Bangladesh U19 Women's Team will tour Sri Lanka during January 2025 to play four T20 Matches against Sri Lanka U19 Women's Team.

The Bangladesh team will arrive in Sri Lanka tomorrow the 2nd January 2025.

| DATE | MATCH | TIME | VENUE |
|---|---|---|---|
| 3rd January 2025 | First T20 | 14h00 | Thurstan Ground |
| 5th January 2025 | Second T20 | 14h00 | Thurstan Ground |
| 7th January 2025 | Third T20 | 10h00 | Surrey Village, Maggona |
| 9th January 2025 | Fourth T20 | 10h00 | BRC |

# இலங்கை வரும் பங்களாதேஷ் மகளிர் இளையோர் கிரிக்கெட் அணி

பங்களாதேஷ் மகளிர் இளையோர் (19 வயதுக்குட்பட்ட) கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடவுள்ளது.

இலங்கை இளையோர் மகளிர் அணி மற்றும் பங்களாதேஷ் இளையோர் மகளிர் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள குறித்த நான்கு போட்டிகள் கொண்ட ரி20 தொடர் நாளை (03) ஆரம்பமாகிறது. குறித்த தொடரில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணி இன்றைய தினம் (02) இலங்கையை வந்தடையவுள்ளது.

முதல் போட்டி நாளை நடைபெறும் நிலையில், இரண்டாவது போட்டி 05ஆம் திகதியும் மூன்றாவது போட்டி 07ஆம் திகதியும் நான்காவது போட்டி 09ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இதில் முதலில் நடைபெறவுள்ள இரண்டு போட்டிகளும் பிற்பகல் 02 மணிக்கு நடைபெறும். இறுதி 02 போட்டிகளும் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்




★ மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்ற ஆஸி. அணியுடனான 4ஆவது டெஸ்ட் போட்டியில் ஜஸ்பிரிட் பும்ரா 09 விக்கெட்டுகள் (02 இன்னிங்ஸிலும் சேர்த்து) வீழ்த்தியதன் மூலம் அந்த மைதானத்தில் 25 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் 110 வருடங்களுக்குப்பின் மெல்போர்ன் மைதானத்தில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய வெளிநாட்டு வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்தார். மேலும் மெல்போர்ன் மைதானத்தில் ஒரு போட்டியில் 09 விக்கெட்டை கைப்பற்றிய முதல் இந்தியர் என்ற பெருமையையும் பும்ரா பெற்றார்.



★ மெல்போர்னில் நிறைவடைந்த ஆஸி. அணியுடனான 4ஆவது டெஸ்டில் கன்னி சதமடித்த இந்திய வீரர் நிதிஷ் ரெட்டி பல சாதனைகளைப் படைத்த நிலையில், முக்கிய மான தருணத்தில் மெல்போர்னில் சதமடித்தால் அவருக்கு ரூ.85 இலட்சம் (இலங்கை மதிப்பு) பரிசுத்தொகை வழங்கு வதாக ஆந்திரா கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. நிதிஷ் ரெட்டி ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் 8ஆவது இடத்துக்கு சரிந்தது. வெஸ்ட் இண்டீஸ் அணி கடைசி இடத்தில் உள்ளது.



★ பாகிஸ்தானுடனான முதல் டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் அதிரடி யாக விளையாடிய ரபாடா 31 ரன்களை அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 1000 ரன்கள் மற்றும் 300 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய 3ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையை ரபாடா படைத்தார்.

★ இந்திய – ஆஸி. அணிகளுக்கிடையில் மெல்போர்னில் நடைபெற்ற பொக்சிங் டே டெஸ்ட் போட்டியின் 05 நாட்களில் 03 இலட்சத்து 51 ஆயிரத்து 104 ரசிகர்கள் மைதானத்தில் ஆட்டத்தைக் கண்டு ரசித்தனர். பொக்சிங் டே டெஸ்ட் வரலாற்றில் இத்தனை ரசிகர்கள் போட்டியில் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

# தமிழரசுக் கட்சி அழிந்தாலும் தன் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் குற்றச்சாட்டு

புகஜிந்தன்



தமிழரசுக் கட்சி சிதைந்தாலும் அழிந்தாலும் பரவாயில்லை. கட்சி தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும் சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அலுவலகத்தில் நேற்று (01) நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் சீ.வி.சிவஞானம் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அதுமட்டுமின்றி சுமந்திரன் தரப்போடு முரண்பட்ட பலரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது முழுக்க முழுக்க ஒரு மோசமான செயற்பாடு. மத்திய குழுவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தனக்கு சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளில் சுமந்திரன் மும்முரமாக இருந்துள்ளார். மாவை சேனாதிராசாவை மாற்றவேண்டும் என்றால், அல்லது அவர் இராஜிநாமா செய்துள்ளார் என்றால் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட தலைவராக சிறிதரன் இருக்கின்றார்.

அவரை தலைவராக தெரிவுசெய்வதுதான் ஒரு அறநெறிக்கு உட்பட்டதாகும். அதை விடுத்து அதைப்பற்றி எதுவுமே பேசாமல் சி.வி.கே.சிவஞானம் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். தமிழரசுக் கட்சியில் சுமந்திரன் பிரிவினருக்கு எதிராக இருக்கின்றவர்களை அகற்றி, சிறிதரனை தனிமைப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கை உள்வாரியாக இடம்பெறுகின்றது என்றே இதன் மூலம் நான் பார்க்கின்றேன்.

இன்னும் கொஞ்சக்காலத்தில் சிறிதரன் தனிமைப்பட்டுப்போக சிறிதரனுக்கு எதிராக ஒரு ஒழுக்காற்று தீர்மானத்தை நிறைவேற்றி அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கூட பறிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

குறைந்தது ஆறு மாதத்துக்குள் சுமந்திரன் சிறிதரனை கட்சியிலிருந்து நீக்கி அல்லது தேசியப் பட்டியலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சத்தியலிங்கத்தை பதவியிலிருந்து இராஜிநாமா செய்யச்சொல்லி தான் அதற்கூடாக பாராளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இன்னொரு பக்கமாக சுமந்திரன் ஊடகப் பேச்சாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஏற்கனவே ஸ்ரீநேசன் ஊடகப் பேச்சாளராக இருக்கின்றார். அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார்.

தற்போது புதிதாக கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் இருப்பார் என்றும் பாராளுமன்றத்தின் ஊடகப் பேச்சாளராக சிறிநேசன் இருப்பாரென்றும் கூறப்படுகிறது. ஒரு கட்சிக்கு ஏன் இரண்டு ஊடகப் பேச்சாளர்கள்? ஒரு கட்சிக்கு ஒரு ஊடகப் பேச்சாளர் போதுமானதே.

சுமந்திரனுக்கு பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன். தமிழரசுக் கட்சியின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் மாவை சேனாதிராசா தான் என சாணக்கியன் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

மாவை சேனாதிராசாவில் விமர்சனங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் இந்த போக்குகள் எல்லாவற்றுக்கும் மூல காரணம் சுமந்திரன் தான் என்பது இன்றைக்கு வெட்ட வெளிச்சமானது. இதிலே தமிழரசுக் கட்சி என்பது ஒரு பாரம்பரிய கட்சி. அதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. அதற்கு வடக்கு கிழக்கு கட்டமைப்பு இருக்கிறது. அது பலவீனப்பட்டு செல்வது தமிழ் அரசியலை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும்.

ஆகவே தமிழரசுக் கட்சியை பாதுகாக்கின்ற நடவடிக்கையை கட்சிக்காரர்கள் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே வெளியிலிருந்து மக்கள் ஒரு பலமான அழுத்தத்தை கொடுப்பதன் ஊடகவே இதனை முன்னேற்றமுடியும் என நான் கருதுகின்றேன்.

அதிலிருந்து நாம் தவறுவோமாகவிருந்தால் ஒரு குறுகிய காலத்திலேயே இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கிலே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகக்கூடிய ஒரு சூழல் வரலாம் என்பதே எனது நிலைப்பாடு. இந்தப் போக்கை தமிழ் மக்கள் அனுமதிக்கப்போகிறார்களா என்பதுதான் எனது கேள்வி.

இதில் தெளிவாகத் தெரிகின்ற ஒரு விடயம் இது ஒரு கொள்கைப் பிரச்சினை. தமிழரசுச் கட்சியும் தமிழ்த் தேசிய அரசியலும் இதுவரை பின்பற்றிய அரசியலை கைவிட்டு இன்னோர் அரசியலை கொண்டு செல்வதற்காக குறிப்பாக இறைமை அரசியலை கைவிட்டு ஒரு சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் ஒரு அரசியலை கொண்டு செல்வதற்கும் இணக்க அரசியலை கொண்டு செல்வதற்காகவும் சுமந்திரன் இந்த வேலையை செய்கிறார். இந்த பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என்றார்.

# வடக்கில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 3500 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை






2024ஆம் ஆண்டு வட மாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3499 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக 02 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

குறிப்பாக வடமாகாணத்தில் 3445 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.மேலும் வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. இந்நிலையில் 946 வர்த்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரிசி விற்பனை தொடர்பாக வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகளும் வவுனியா மாவட்டத்தில் 126 விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகளில் ஒளிராத மின்குமிழ்கள்

## இரவு நேரத்தில் பொதுமக்கள் – வைத்தியசாலை ஊழியர்கள் அசௌகரியம்



மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான வீதிகளில் உள்ள அனைத்து மின் கம்பங்களிலும் மின்குமிழ்கள் ஒளிராத நிலையில் காணப்படுவதாகவும் இரவு நேரத்தில் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மற்றும் பணிபுரியும் சிற்றூழியர்கள், தாதியர்கள், வைத்தியர்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கு அருகில் உள்ள இல்லங்களுக்குச் செல்லும் வீதிகள் சேதமடைந்துள்ளதுடன் வைத்தியசாலையை அண்டியுள்ள பகுதிகள் பற்றைக் காடு நிறைந்து காணப்படுகிறது.இதனால் இரவு நேரத்தில் பன்றிகள் மற்றும் சிறுத்தை என காட்டு விலங்குகளின் நடமாட்டத்துக்கு மத்தியிலும் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாக வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வைத்தியசாலை வட்டாரத்தில் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக அவற்றை மஸ்கெலியா மின்சார சபை அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் கட்சிக் காரியாலயம் நானுஓயா நகரில் திறந்துவைப்பு






டி.பெருமாள்

அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நானுஓயா நகரில் கட்சிக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது முன்னணியின் தோட்டக்கமிட்டி தலைவர்கள், பிரதேச பொறுப்பாளர்கள், அமைப்பாளர்கள், இளைஞர் யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, எமது மலையகத்தில் ஊடறுத்து காணப்படும் கட்சி சார்ந்த அரசியல் முறைமை மாற்றப்பட வேண்டும், அனைவரும் ஒரு சமமாக நடத்தப்பட வேண்டும், அதன் ஆரம்பகட்டமாக எந்தவொரு கட்சி தொழிற்சங்க பேதமுமின்றி அனைவருக்கும் சேவை செய்யும் இடமாக எமது காரியாலயங்கள் இருக்க வேண்டும், எந்த கட்சியினராக இருந்தாலும் மக்களின் பிரச்சினைகள் எனும்போது அதற்கு எம்மால் முடிந்த தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த தொழிற்சங்கம் நாட்டின் ஏனைய பகுதிகளில் வெகு விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டாவளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடியவர்கள் கைது!

பு.கஜிந்தன்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிய சிறுவர்கள் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கண்டாவளை கொம்படி அம்மன் கோவிலுக்கு முன்பாக கடற்கரையோரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அந்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் களவாடப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மோட்டார் சைக்கிளின் உரிமையாளரால் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும் குறித்த பகுதி கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி என்பதால் இச்சம்பவம் குறித்து தர்மபுரம் பொலிஸாரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராசா தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், மருதங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 15 மற்றும் 16 வயதுகளையுடைய இரண்டு சிறுவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சிறுவர்கள் இருவரும் நேற்று (01) கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் சிறுவர்கள் என்பதனல் அவர்களை பிணையில் செல்வதற்கு நீதவான் அனுமதியளித்தார்.

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதுவருடத்தில் கடமைகள் ஆரம்பிப்பு








பு.கஜிந்தன்

2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (01) வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வருடத்துக்கான முதல்நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய ஆண்டை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து உத்தியோகத்தர்கள் 'தூய்மையான இலங்கை' (Clean Sri Lanka) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

மேலும் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற "க்ளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் உத்தியோகத்தர்கள் நேரலை ஊடாக இணைந்திருந்தனர்.

நிகழ்வில் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் 2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றியதுடன் இந்த வருடம் அனைவரது வாழ்விலும் மிகுந்த சந்தோசங்களையும் வளங்களையும் கொண்டுவர வேண்டுமென புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன், கணக்காளர் ம.சிவகுமாரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, நிர்வாக கிராம அலுவலர் சோ.சிவலிங்கம், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# உயர்தரப் பரீட்சை திருப்திகரமாக அமையவில்லை

## விரக்தியில் யாழில் மாணவி உயிர்மாய்ப்பு!

பு.கஜிந்தன்

க.பொ.த.உயர்தரப் பரீட்சையை திருப்திகரமாக எதிர்கொள்ள முடியவில்லை என்ற விரக்தியில் யாழ்ப்பாணத்தில் மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் கல்வி பயின்ற சிறிகேசவன் ஸ்ரெபிகா (வயது 19) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த மாணவி நேற்று முன்தினம் பரீட்சைக்கு தோற்றிவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். பரீட்சை திருப்திகரமாக இல்லை என தாய் - தந்தையருக்கு கூறி கவலையடைந்துள்ளார். பின்னர் அவரது தந்தை வீட்டை விட்டு வெளியே சென்றவேளை குறித்த மாணவி வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த மாணவி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ 2பி சித்திகளை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





மத்திய மாகாண சபையின் அதிகாரிகள் 2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு மத்திய மாகாண சபையின் தலைவர் எல்.டி.நிமலசிறி மற்றும் மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க ஆகியோரின் இணைத் தலைமையில் மாகாண சபை வளாகத்தில் நேற்று (01) இடம்பெற்றது. மாகாண சபையின் பொது உத்தியோகத்தர்களுக்கு "சுத்தமான இலங்கை" தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதுடன், தூய்மையான இலங்கை உறுதிமொழியும் வாசிக்கப்பட்டது.

(படங்கள் - எம்.ஏ.அமீனுல்லா)

# ஆண்டுக்கு 1,000 பேர் ஐ.எஸ். அமைப்பில்: இலக்கு நிர்ணயித்த சஹ்ரான் ஹாசிம்



இலங்கையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் மூளையாகச் செயற்பட்ட சஹ்ரான் ஹாசிம், ஆண்டுக்கு 1,000 பேரை ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் சேர்க்க தமக்கு இலக்கு நிர்ணயித்திருந்ததாக கோவை கார் குண்டுவெடிப்பு வழக்கில் கைதான நபர் வாக்குமூலமளித்துள்ளார்.

கோவை, உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோவில் பகுதியில், 2022 ஒக்டோபர் 23ஆம் திகதி கார் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இத்தாக்குதலில், ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஜமேஷா முபின் பலியானார். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள், ஜமேஷா முபின் சகாக்களென அறியப்படும் 18 பேரை கைதுசெய்து சிறையிலடைத்துள்ளனர்.

அவர்களில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அபு ஹனீபா (வயது 33), பவாஸ் ரஹ்மான் (வயது 36) மற்றும் சரண் (வயது 25) ஆகியோரை மூன்று நாட்கள் காவலிலெடுத்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அபு ஹனீபா அளித்துள்ள வாக்குமூலத்தில்,

''இலங்கையில் 2019இல் ஈஸ்டர் நாளில் சேர்ச் உள்ளிட்ட இடங்களில் தொடர் குண்டுவெடிப்பு நடத்திய ஐ.எஸ். பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிம் தலைமையில் செயற்பட்டு வந்தோம். எங்களுக்கு சஹ்ரான் ஹாசிம் சென்னை மண்ணடி மற்றும் கோவையில் இரகசிய பயிற்சியளித்தார். அவருக்கு அடுத்த நிலையில், ஜமேஷா முபின் செயற்பட்டு வந்தார்.

அவர் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனப்பகுதியில் எங்களுக்கு துப்பாக்கி சுடுதல் மற்றும் வெடி குண்டு தயாரிப்புப் பயிற்சியளித் தார். எங்களுக் குள் தகவல் பரிமாற்றம் சங்கேத மொழியில் நடந்து வந்தது.

கேரள மாநிலம் மற்றும் கோவை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் செயற்படும் உடற்பயிற்சிக் கூடங்கள், அரபுக் கல்லூரிகளை ஆயுத பயிற்சியளிக்கும் இடமாகப் பயன்படுத்தி வந்தோம். ஆண்டுக்கு 1,000 பேரையாவது ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் சேர்க்கவேண்டுமென சஹ்ரான் ஹாசிம் இலக்கு நிர்ணயித்திருந்தார். அதற்கான பணிகளை முழுவீச்சில் கவனித்து வந்தோம்.

எங்களால் மூளைச்சலவை செய்யப்பட்டோர், வேறு சில பயங்கரவாத அமைப்பில் சேர்ந்தனர். இதனால் அவர்கள் எங்களின் எதிரி பட்டியலில் இடம்பெற்றனர். கோவை ஈஸ்வரன் கோயிலை தகர்த்து, எங்கள் முதல் வெற்றியாகக் கொண்டாடவிருந்தோம். அது தோல்வியில் முடிந்துவிட்டது.''
- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# 2025 புத்தாண்டில் உலக மக்கள் தொகை 809 கோடியாக அதிகரிப்பு

உலக மக்கள் தொகை நேற்றுடன் (01) 809 கோடியாக அதிகரித்துள்ளது.

உலக மக்கள் தொகை தொடர்பில் அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியகம் மதிப்பீடு செய்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில் புத்தாண்டு பிறந்த நேற்றுடன் (01) உலகம் முழுவதும் மக்கள் தொகை 809 கோடியாக அதிகரித்துள்ளது.

மிகவும் சரியாக சொல்லப்போனால் நேற்றுடன் உலக மக்கள் தொகை 809,20,34,511ஆக அதிகரித்துள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் மட்டும் உலக மக்கள் தொகை எண்ணிக்கை 7.1 கோடி உயர்ந்துள்ளது. 2023இல் 7.5 கோடி மக்கள் தொகை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2025 ஜனவரியில் உலகம் முழுவதும் ஒவ்வொரு நொடியும் 4.2 பிறப்புகளும் 2.0 இறப்புகளும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# அமெரிக்காவில் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கார் மோதி 10 பேர் பலி



அமெரிக்காவின் நியூ ஓலியன்ஸ் (New Orleans) நகரில் புத்தாண்டு கொண்டாட்டக் கூட்டத்தில் அதிவேகமாக வந்த காரொன்று புகுந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்திலுள்ள நியூ ஓலியன்ஸ் நகரில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்றன. அப்போது திடீரென எவரும் எதிர்பாராதவிதமாக அந்தக் கூட்டத்துக்குள் அதிவேகத்தில் புகுந்த காரொன்று அங்கிருந்தவர்கள் மீது பலமாக மோதியது. இந்தச் சம்பவத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததுடன், 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனிடையே விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதி துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விண்வெளியில் 16 தடவைகள் சூரியோதயம் பார்க்கும் வாய்ப்பைப் பெற்ற சுனிதா வில்லியம்ஸ்!







விண்வெளி ஆய்வு நிலையத்தில் ஆய்வு பணியிலுள்ள சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவினர் புத்தாண்டைக் கொண்டாடும்போது 16 தடவைகள் சூரியோதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தைப் பார்ப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது விண்வெளியிலிருக்கும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம் மற்றும் அவரது குழுவினர், புத்தாண்டில் மட்டும் 16 தடவைகள் சூரியோதயங்களைப் பார்க்கும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

விண்வெளி மையம் புவியின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றி வரும்போது அவர்கள் சூரியோதயத்தைக் காணமுடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இது குறித்து விண்வெளி நிலையம் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், “2024ஆம் ஆண்டு முடியும்போது எக்ஸ்ப்-72 குழுவினர் 16 தடவைகள் சூரியோதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் காண்பார்கள்” என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் விண்வெளி வீரர் பேரிவில்மோருடன் போயிங் ஸ்டார்லிங் விண்கலத்தில் விண்வெளிக்குச் சென்ற சுனிதா வில்லியம்ஸ் 9 நாட்களில் பூமிக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சில தொழில்நுட்பக் கோளாறுகளால் அங்கேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால், கிறிஸ்மஸ் பண்டிகையையும் அங்கேயே கொண்டாடினார். இதுபற்றிய வீடியோவொன்றை அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா பகிர்ந்துள்ளது.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பேரிவில்மோர் மார்ச் மாதத்தில் பூமிக்குத் திரும்பி வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் பெப்ரவரியில் திரும்புவதற்குத் திட்டமிடப்பட்டனர். ஆனால், ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ-10 பணியின் தாமதம் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

பேரி வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸுக்கு இரண்டு காலி இருக்கைகளுடன் க்ரூ-9 இன் இரண்டு விண்வெளி வீரர்கள் செப்டெம்பர் மாத இறுதியில் விண்வெளி நிலையத்துக்கு வந்தனர். 2025ஆம் ஆண்டு பெப்ரவரியில் நால்வரும் வீடு திரும்ப திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அவுஸ்திரேலியா



ஜேர்மனி



லண்டன்

# வாணவேடிக்கைகளின் வர்ண ஜாலங்களால் பார்வையாளர்களை பிரமிப்பில் ஆழ்த்திய புர்ஜ் கலிஃபா

உலகம் முழுவதும் மலர்ந்துள்ள 2025 புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ள நிலையில், உலகிலேயே மிகவும் உயரமான கட்டடமான டுபாயின் புர்ஜ் கலிஃபாவில் காட்சிப்படுத்தப்பட்ட புத்தாண்டு ‘கவுண்ட் டவுன்’னை காண பல்லாயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர்.

தொடர்ந்து 9 நிமிடங்களுக்கு நடைபெற்ற வாண வேடிக்கைகளின் வர்ண ஜாலங்கள் பார்வையாளர்களை பிரமிப்பில் ஆழ்த்தியது.


மற்றொரு ஐக்கிய அரபு இராச்சிய நகரமான ராஸ் அல்-கைமாவில், ட்ரோன் ஷோ மூலம் வானில் புத்தாண்டு ‘கவுண்ட் டவுன்’ காட்சிப்படுத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து வாணவேடிக்கைகள் நடைபெற்றன.

**உக்ரைனில் களையிழந்த புத்தாண்டு கொண்டாட்டங்கள்**

ரஷ்ய உக்ரைன் போர் இடம்பெற்றுவரும் நிலையில், உக்ரைன் தலைநகர் கீவில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்குப் பெயர்பெற்ற சுதந்திர சதுக்கம், போரை முன்னிட்டு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் வெறிச்சோடி காணப்பட்டது.




சீனா



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7